# GRADE-05 ANF 554

# தமிழ்

# குறிப்புத் தொகுப்புக்கள்.

## பாகம்-1

பெயர் : ..........................................................

தரம் : ..........................................................

பாடசாலை :.........................................................


நவீன மீன் சந்தைக்கு முன்பாக
இலக்கம் 222/5, ஊர் வீதி -
காத்தான்குடி 01.
தொலைபேசி இலக்கம் : 0773664619
**Email : anftechkky@gmail.com**

# தமிழ் குறிப்புகள்


- சுருக்கக் குறியீடுகள் 01
- ஆண்டு நிறைவு விழாக்கள் 02
- ஐந்தின் மகிமை 02
- மரபுத் தொடர்கள் 02
- உவமைத் தொடர்கள் 05
- பழமொழிகள் 07
- மரபுச் சொற்கள்
  - தொனிகள் 10
  - இளமைப்பெயர்கள் 10
  - ஆண், பெண் மரபுப் பெயர்கள் 11
  - பிஞ்சு மரபுப் பெயர்கள் 11
  - வித்து மரபுப் பெயர்கள் 12
  - இலை, தொகுதி மரபுப் பெயர்கள் 12
  - உள்ளீட்டு மரபுப் பெயர்கள் 12
  - கூட்டத்தை குறிக்கும் மரபுச் சொற்கள் 13
  - பிராணிகளின் மலங்களின் மரபுப் பெயர்கள் 14
- தொடர் மொழிக்கு ஒரு மொழி 14
- எழுத்து வழு நீக்கி எழுதுதல் 17
- இரட்டைக் கிளவி 19
- இணைமொழிகள் 20
- பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள் 23
- கணினி கலைச் சொற்கள் 24
- அறிவுரைகள் 24
- பெயர்ச்சொற்கள் 25
- வினைச்சொற்கள் 26
- ஒத்த கருத்துச் சொற்கள் 27
- ஒரு பொருள் பன்மொழி 34
- பல பொருள் ஒரு மொழி 35
- ஒலி வேறுபாட்டுச் சொற்கள்
  - "லகர" "ளகர" "ழகர" வேறுபாட்டு சொற்கள் 37
  - "னகர" "ணகர" "நகர" வேறுபாட்டு சொற்கள் 37
  - "ரகர" "றகர" வேறுபாட்டு சொற்கள் 37
- ஒலி வேறுபாட்டு வாக்கியங்கள் 38
- நூல்களும் இயற்றியவர்களும் 38
- எதிர்க்கருத்துச் சொற்கள் 39
- நிறுத்தக் குறியீடுகள் 42
- விடுகதைகள் 43
- விகடத் துணுக்குகள் 46

# தமிழ் - குறிப்புகள்

## சுருக்கக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| இ.போ.ச | (S.L.T.B) | - இலங்கை போக்குவரத்துச் சபை |
| இ.ம.வ | (C.B.S.L) | - இலங்கை மத்திய வங்கி |
| இ.மி.ச | (C.E.B) | - இலங்கை மின்சார சபை |
| இ.பெ.கூ. | (C.P.C) | - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் |
| இ.ஒ.கூ. | (S.L.B.C) | - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் |
| இ.ரூ.கூ. | (S.L.R.C) | - இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் |
| இ.பு.தி | (C.G.R) | - இலங்கை புகையிரதத் திணைக்களம் |
| கி.மு | (B.C) | - கிறிஸ்துவுக்கு முன் |
| கி.பி | (A.D) | - கிறிஸ்துவுக்குப் பின் |
| ப.த | (R.P) | - பதிவுத் தபால் |
| அ.சே | | - அரச சேவை |
| கூ.மொ.வி.நி | (C.W.E) | - கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் |
| ப.நோ.கூ.ச | (CO-OP) | - பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் |
| கி.சே. | G.S | - கிராம சேவையாளர் |
| பி.செ. | D.S | - பிரதேச செயலாளர் |
| மு.ப | (AM) | - முற்பகல் |
| பி.ப | (PM) | - பிற்பகல் |
| பா.அ.ச | (S.D.S) | - பாடசாலை அபிவிருத்திச் சங்கம் |
| கி.அ.ச | (R.D.S) | - கிராம அபிவிருத்திச் சங்கம் |
| ந.ச | (T.C) | - நகர சபை |
| மா.ந.ச | (M.C) | - மாநகர சபை |
| வீ.அ.அ.ச | (R.D.A) | - வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| பா.உ | (M.P) | - பாராளுமன்ற உறுப்பினர் |
| பா.ம.க | (S.B.A) | - பாடசாலை மட்டக் கணிப்பீடு |
| தே.க.நி | (N.I.E) | - தேசிய கல்வி நிறுவகம் |
| இ.அ.தி | (S.L.P.D) | - இலங்கை அஞ்சல் திணைக்களம் |
| வெ.நோ.பி | (O.P.D) | - வெளி நோயாளர் பிரிவு |
| இ.அ.த.தி | (D.G.I) | - இலங்கை அரச தகவல் திணைக்களம் |



Printed By : ANF TECH - 077 366 46 19

## ஆண்டு நிறைவு விழாக்கள்

| | |
|---|---|
| பத்து வருட நிறைவு விழா | - தசாப்த விழா |
| இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா | - வெள்ளி விழா |
| முப்பதாவது ஆண்டு நிறைவு விழா | - முத்து விழா |
| நாற்பதாவது ஆண்டு நிறைவு விழா | - மாணிக்க விழா |
| ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா | - பொன் விழா |
| அறுபதாவது ஆண்டு நிறைவு விழா | - வைர விழா/மணி விழா |
| எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா | - பவள விழா |
| எண்பதாவது ஆண்டு நிறைவு விழா | - அமுத விழா |
| நூறாவது ஆண்டு நிறைவு விழா | - நூற்றாண்டு விழா |

## ஐந்தின் மகிமை

| | |
|---|---|
| ஐங்குரவர் | - தாய், தந்தை, குரு, அரசன், தமையன் |
| ஐம்பொறிகள் | - மெய், வாய், கண், மூக்கு, செவி |
| ஐம்புலன்கள் | - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் |
| ஐம்பூதம் | - நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் |
| ஐவகை இசைக்கருவி | - தோல், துளை, பிடறு, நரம்பு, கஞ்சல் |
| ஐவகை வண்ணங்கள் | - வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை |
| ஐவகைத் தொழில் | - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் |
| ஐம்பெரும் பாதகங்கள் | - கொலை, பொய், களவு, சூது, விபசாரம் |

## மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| கண்ணாயிருத்தல் | - | கவனமாக இருத்தல் |
| ஆறப்போடல் | - | பிற்போடல் |
| புண்படுத்தல் | - | மனதை வருந்தச் செய்தல் |
| விட்டுக் கொடுத்தல் | - | இணக்கம் காட்டுதல் |
| பூசி மெழுகுதல் | - | குற்றத்தை மறைத்தல் |
| நட்டாற்றில் விடல் | - | ஆபத்து வேளையில் கைவிடல் |
| முகங்கொடுத்தல் | - | எதிர் கொள்ளல் |
| எடுத்தெறிதல் | - | அலட்சியம் செய்தல் |
| அகடவிகடம் | - | தந்திரம் |
| சீட்டுக் கிழித்தல் | - | வேலையிலிருந்து நீக்கல் |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | |
|---|---|---|
| கம்பி நீட்டுதல் | - | தலைமறைவாதல் |
| ஏட்டிக்குப் போட்டி | - | விதண்டாவாதம் |
| கை கழுவல் | - | பொறுப்பை நீக்கிக் கொள்ளல் |
| கடன் கழித்தல் | - | மனமின்றிச் செய்தல் |
| தோள் கொடுத்தல் | - | உதவி செய்தல் |
| முகம் மலர்தல் | - | மகிழ்ச்சியடைதல் |
| வயிற்றெரிச்சல் | - | பொறாமை |
| அவசரக் குடுக்கை | - | பதற்றக்காரன் |
| இரண்டுங்கெட்டான் | - | நன்மை தீமை அறியாதவன் |
| இலவு காத்த கிளி | - | காத்திருந்து ஏமாறுதல் |
| ஏட்டுச் சுரைக்காய் | - | அனுபவமில்லாத/ பயனற்ற கல்வி |
| ஓட்டை வாயன் | - | இரகசியத்தைக் காக்க முடியாதவன் |
| காது குத்துதல் | - | ஏமாற்றுதல் |
| குரங்குப் பிடி | - | பிடிவாதம் |
| தாளம் போடல் | - | வறுமையால் வாடல் |
| நாக்குப் புரளுதல் | - | சொல் தவறுதல் |
| நுனிப் புல் மேய்தல் | - | மேலெழுந்தவாரியாகப் படித்தல் |
| கண்ணுங் கருத்துமாய் | - | முழுக் கவனமுடன் /மிக அவதானமாக |
| பொடி வைத்துப் பேசுதல் | - | தந்திரமாகப் பேசுதல் |
| கை கூடுதல் | - | சித்தியடைதல் |
| கண் திறத்தல் | - | அறிவு உண்டாதல் |
| நெஞ்சு புண்ணாதல் | - | மனம் வருந்துதல் |
| கண் மலர்தல் | - | விழித்தல் |
| பதம் பார்த்தல் | - | இயல்பை அறிதல் |
| கண் வளர்தல் | - | நித்திரை செய்தல் |
| விழலுக்கு இறைத்தல் | - | வீண் செலவு |
| கண் அயர்தல் | - | நித்திரை செய்தல் |
| கல்லில் நாருரித்தல் | - | இல்லாததைப் பெற முயலுதல் |
| செவி சாய்த்தல் | - | கவனித்துக் கேட்டல் |
| காது கொடுத்தல் | - | அவதானித்தல் |
| வாட்டசாட்டம் | - | தோற்றப் பொலிவு |
| நட்டாற்றில் விடல் | - | ஆபத்தில் கை விடல் |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | |
|---|---|---|
| கண் மூடுதல் | - | இறத்தல் |
| ஒத்துப்பாடுதல் | - | ஆதரவளித்தல் |
| கழுத்தறுத்தல் | - | நம்பிக்கைத் துரோகம் |
| காதிலடிபடல் | - | செய்தி பரவுதல் |
| ஓட்டைக் கை | - | வீண் செலவாளி |
| கட்டுக்கதை | - | பொய்க்கதை |
| அறை கூவுதல் | - | போருக்கழைத்தல் |
| அகலக் கால் வைத்தல் | - | அளவு கடந்து போதல் |
| வாலாட்டுதல் | - | சேட்டை செய்தல் |
| அறக்கப் பறக்க | - | விரைவாக |
| வாய்புலம்புதல் | - | பிதற்றுதல் |
| காலூன்றல் | - | நிலைத்து நிற்றல் |
| வயிறு குளிர்தல் | - | திருப்தியடைதல் |
| கை தூக்குதல் | - | துன்பத்தில் உதவுதல் |
| கை தாங்குதல் | - | உதவி செய்தல் |
| பல்லிளித்தல் | - | கெஞ்சுதல் |
| வயிற்றிலடித்தல் | - | சீவனத்தைக் கெடுத்தல் |
| தலை காட்டுதல் | - | வெளி வருதல் |
| கை கலத்தல் | - | சண்டையிடுதல் |
| கண்ணாயிருத்தல் | - | கவனமாயிருத்தல் |
| கை கொடுத்தல் | - | துன்பத்தில் உதவுதல் |
| முன்னுக்கு வருதல் | - | வாழ்க்கையில் முன்னேறுதல் |
| பல்லைப் பிடுங்குதல் | - | சக்தியைக் கட்டுப்படுத்தல் |
| இனிப்புக் காட்டுதல் | - | ஆசை காட்டல் |
| தலை கவிழ்தல் | - | வெட்கமடைதல் |
| உச்சி குளிர்தல் | - | மிக மகிழ்தல் |
| கை பிசைதல் | - | செய்வதறியாது தவித்தல் |
| தட்டிக் கொடுத்தல் | - | உற்சாகப்படுத்தல் |
| கதை கட்டுதல் | - | பொய்யான செய்தியைப்பரப்புதல் |
| கடன் கழித்தல் | - | மனமின்றிச் செய்தல் |
| மூடி மறைத்தல் | - | தவறை மறைத்தல் |

| | | |
|---|---|---|
| அள்ளிக்குவித்தல் | - | நிறைய சம்பாதித்தல் |
| கடன் கழித்தல் | - | விருப்பின்றிச் செய்தல் |
| உள்ளம் கசிதல் | - | மனமிரங்குதல் |
| நாக்கு நீளுதல் | - | அடக்கமின்றிப் பேசுதல் |
| ஆழம் பார்த்தல் | - | நிலைமையை அறிதல் |
| எடுத்தெறிதல் | - | அடக்கமின்றி நடத்தல் |
| இளிச்சவாயன் | - | எளிதில் ஏமாறுபவன் |
| சந்தியில் நிற்றல் | - | ஆதரவின்றி நிற்றல் |
| ஒற்றைக் காலில் நிற்றல் | - | விடாப்பிடியாக நிற்றல் |
| கை வரிசை | - | திறமை |
| கிள்ளித் தெளித்தல் | - | கொஞ்சம் கொடுத்தல் |
| முகத்தில் அடித்தல் | - | நேரே நிந்தித்தல் |
| பகற் கனவு காணல் | - | பேராசை கொள்ளல் |
| வாய்க் கொழுப்பு | - | அகங்காரம் |
| ஒத்துப் பாடுதல் | - | ஆமோதித்தல் |
| இட்டுக் கட்டுதல் | - | இல்லாததைச் சொல்லுதல் |

# உவமைத் தொடர்கள்

| | |
|---|---|
| 1. நீரின் மேல் எழுத்துப் போல | - நிலையற்ற தன்மை |
| 2. சூரியனைக் கண்ட பனி போல | - மறைதல் |
| 3. நகமும் சதையும் போல | - ஒற்றுமை |
| 4. பசுமரத்தாணி போல | - நிலையான தன்மை |
| 5. பூவும் மணமும் போல | - பிரியாத தன்மை |
| 6. உடும்புப் பிடி போல | - விடாப் பிடியாக இருத்தல் |
| 7. அத்தி பூத்தாற் போல | - மிக அரிது |
| 8. சிலையில் எழுத்துப் போல | - நிலையானது / அழியாதது |
| 9. கல்லின் மேல் எழுத்துப் போல | - நிலையானது |
| 10. செவிடன் காதில் ஊதிய சங்கு போல | - பயனற்ற நிலை |
| 11. கீரியும் பாம்பும் போல | - பகை உணர்வு |
| 12. காட்டில் எரியும் நெருப்புப் போல | - பிரயோசனமற்றது |
| 13. வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல | - துன்பத்திற்கு மேல் துன்பம் |


Printed By : ANF TECH - 077 366 46 19

14. உயிரும் உடலும் போல - ஒற்றுமை
15. நீறு பூத்த நெருப்புப் போல - மறைந்திருக்கும் தன்மை
16. சிறகிழந்த பறவை போல - ஆதரவற்ற நிலை
17. சூரியனைக் கண்ட தாமரை போல - மகிழ்ச்சி
18. விழலுக்கிறைத்த நீர் போல - பயனற்ற தன்மை
19. நுனிப் புல் மேய்தல் - மேலோட்டமாகப் படித்தல்
20. வைக்கோல் பட்டடை நாய் போல - தானும் அனுபவியாது - பிறரையும் அனுபவிக்க விடாது இருத்தல்
21. வேலியே பயிரை மேய்ந்தது போல - காவலே தீங்கு செய்தல்
22. புயலில் அகப்பட்ட கலம் போல - செய்வதறியாத நிலை
23. புறக்குடத்துக்கு வார்த்த நீர் போல - பயனற்ற நிலை
24. தாமரை இலைத் தண்ணீர் போல - நிரந்தரமில்லாத தன்மை
25. தூண்டிலில் மீன் போல - மீள முடியாத துயர்
26. ஆற்றில் கரைத்த புளி போல - பயனற்றது
27. நீர் மேல் குமிழி போல - நிலையற்ற தன்மை
28. எய்தவன் இருக்க அம்பை நோவது போல - வீண் பழி சுமத்தல்
29. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல -துன்பத்திற்கு மேல் துன்பம் வருதல்
30. பசுத் தோல் போர்த்திய புலி போல - போலியான தன்மை
31. கட்டுக்கடங்காத காளை போல - சொல் கேளாத் தன்மை
32. இலை மறை காய் போல - மறைவான தன்மை
33. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல - துன்பத்தின் மேல் துன்பம் வருதல்
34. அடியற்ற மரம் போல - ஆதரவற்ற நிலை
35.. முயற் கொம்பு போல - இல்லாத ஒன்று

■ஒரு பொருளை அல்லது ஒரு செயலை இன்னொன்றுக்கு ஒப்பிட்டுக் கூறுதல் ***உவமை***யாகும்.

1. பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற வயல்
2. பஞ்சு போன்ற மேனி
3. பால் போல வெள்ளை



Printed By : ANF TECH - 077 366 46 19

| | |
|---|---|
| 4. பால் போன்ற நிலவு | 5. முத்துப் போன்ற பற்கள் |
| 6. காகம் போல கறுப்பு | 7. பஞ்சு போன்ற மென்மை |
| 8. தேன் போல இனிமை | 9. எறும்பு போல சுறுசுறுப்பு |
| 10. வாழைத் தண்டு போல கழுத்து | |

# பழமொழிகள்

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு - ஒற்றுமையே பலம்
2. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் - உத்தம நட்பு
3. ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம் - காலம் மாறி வரும்
4. இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை - திருப்திப்படாத மனம்
5. உப்பிட்டவரை உள்ளளவும் நினை - நன்றி மற வேல்
6. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது - வெறும் புத்தகப் படிப்பு/ பயனற்ற கல்வி
7. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - ஒற்றுமை
8. கந்தையானாலும் கசக்கிக் கட்டு - வறுமையிலும் செம்மை
9. காற்றுள்ள போதே தூற்றிக் கொள் - காலந் தவறேல்
10. காகம் திட்டி மாடு சாகாது - பழிக்குப் பயப்படாதே
11. குப்பையில் கிடந்தாலும் குன்றி மணி மங்காது - நற் புகழ் மங்குவதில்லை
12. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
    - முயற்சி செய்தவர் பயன் பெறுவர்.
13. ஆழம் அறியாமல் காலை விடாதே.
    - எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும்.
14. விளையும் பயிரை முளையிலே தெரியும்.
    - இளமையில் எதிர்காலம் புலப்படும்.
15. எட்டாக் கனிக்கு கொட்டாவி விடாதே.
    - கிடைக்காத ஒன்றிற்காக ஏங்குதல்.
16. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
    - எல்லை மீறினால் எதுவும் தீமை பயக்கும்.
17. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.
    - ஒற்றுமையின் பலம்
18. வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்.
    - முன்னேற்பாடு



Printed By : ANF TECH - 077 366 46 19

19. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

- இளமையிற் செய்

20. அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

- விடா முயற்சி

21. ஆனைக்கும் அடி சறுக்கும்.

- பெரியவர்களும் தவறு விடலாம்.

22. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு

- எதையும் அளவோடு செய்தல் வேண்டும்.

23. பேராசை பெரு நட்டம்.

- எல்லை கடந்த ஆசை துன்பம் தரும்.

24. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

- சுகதேகியாக வாழ்வதே பெருஞ்செல்வம்.

25. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.

- நடந்து முடிந்த செயலை நினைப்பதில் பயனில்லை.

26. ஆடையில்லா மனிதன் அரை மனிதன்.

- உடையின் மகிமை

27. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும். ■ பகை அழிவைத் தரும்.

28. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

- தகுதிக்கு மேல் எதையும் பெற முடியாது.

30. தன் வினை தன்னைச் சுடும்.

- பிறருக்குச் செய்யும் தீங்கு தனக்கே தீங்காக முடியும்.

31. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.

- எதையும் குறைவாகப் பேசக் கூடாது.

32.. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

- திறமையின் முக்கியத்துவம்.

33. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

- மனநிறைவே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும்.

34. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

- இளமையில் பழகிய பழக்கம் வயதானாலும் வரும்.

35. முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.

- தெண்டித்தவர் வெற்றி பெறுவார்.

36. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு

- வீண் பெருமை

37. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

- நம்பிக்கை காக்கும்



Printed By : ANF TECH - 077 366 46 19

# வாடிக்கையாளர்களே!

## எங்களிடம்,



**போட்டோ பிரதிகள்**

**வர்ணப் பிரதிகள்**




**மின்சாரக் கட்டணங்கள்**

**நீர்க்கட்டணங்கள்**



**லெமினேட்டிங்**

**போன்ற சேவைகளை பெற்றுக் கொள்ளலாம்.**

ANF TECH

01ம் குறிச்சி மார்கட் முன்பாக,
இலக்கம் 222/5, ஊர் வீதி - காத்தான்குடி 01.
தொலைபேசி இலக்கம் : 077 366 4619
EMAIL: anftechkky@gmail.com

38. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.

■ கோபம் சிந்தனைக்கு இடையூறாக இருக்கும்.

39. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

■ மனச்சாட்சி உறுத்தும்.

40. சாண் ஏற முழம் சறுக்கும்.

■ உயர்ச்சியை மிஞ்சிய தளர்ச்சி.

41. செல்வமென்பது சிந்தையின் நிறைவே.

■ மனத்திருப்தியே பெரிய செல்வம்.

42. துஷ்டனைக் கண்டால் தூர விலகு.

■ தீமை என்று தெரிந்தால் விலகுதல் அழகு.

43. நெருப்பின்றிப் புகையாது.

■ காரணமின்றி காரியம் நிகழாது.

44. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.

■ சிறியதின் சிறப்பு.

45. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

■ ஒன்று இல்லாத சந்தர்ப்பத்தில் அதன் அருமை தெரியும்.

46. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

■ இளம் வயதுக் கல்வி நிலைத்திருக்கும்.

47. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?

■ உலகை அறியாத நிலை.

48. பொறுத்தார் பூமியாள்வார்.

■ பொறுமையின் முக்கியத்துவம்

49. பதறாத காரியம் சிதறாது.

■ நிதானமாகச் சிந்தித்துச் செய்யும் செயல் வெற்றி தரும்.

50. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.

■ சுவையில்லாத உணவினால் பயன் கிடையாது.

51. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு.

■ தாயன்பின் மகிமை.

52. கூழானாலும் குளித்துக் குடி.

■ சுத்தத்தின் முக்கியத்துவம்

543 துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.

■ அடக்கம் இன்மை துன்பத்தைத் தரும்.

54. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் ■ உலோபங் கூடாது

55. இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை

■ தருமத்தின் சிறப்பு



Printed By : ANF TECH - 077 366 46 19

# மரபுச் சொற்கள்

## தொனிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கரடி | - | உறுமும் | தேனீ | - | ரீங்காரம் செய்யும் |
| கழுதை | - | கத்தும் | பன்றி | - | உறுமும் |
| நரி | - | ஊளையிடும் | கோழி | - | கொக்கரிக்கும் |
| சேவல் | - | கூவும் | நாய் | - | குரைக்கும் |
| காகம் | - | கரையும் | எருமை | - | எக்காளமிடும் |
| ஆடு | - | கத்தும் | மயில் | - | அகவும் |
| புறா | - | குறுகுறுக்கும் | குதிரை | - | கனைக்கும் |
| அணில் | - | கீச்சிடும் | பாம்பு | - | சீறும் |
| பல்லி | - | சொல்லும் | தவளை | - | கத்தும் |
| பூனை | - | கத்தும் | கரடி | - | கத்தும் |
| பசு | - | கதறும் | ஓநாய் | - | ஊளையிடும் |
| சிங்கம் | - | கர்ச்சிக்கும் | புலி | - | உறுமும் |
| குரங்கு | - | அலப்பும் | மயில் | - | அகவும் |
| குயில் | - | கூவும் | வண்டு | - | இரையும் |
| ஆந்தை | - | அலறும் | குருவி | - | கீச்சிடும் |
| வானம்பாடி | - | பாடும் | கழுதை | - | கத்தும் |
| எலி | - | கீச்சிடும் | தேவாங்கு | - | அழும் |

## இளமைப் பெயர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அணில் | - | குஞ்சு/பிள்ளை | ஆடு | - | குட்டி |
| கீரி | - | பிள்ளை | காகம் | - | குஞ்சு |
| கோழி | - | குஞ்சு | பாம்பு | - | குட்டி |
| குதிரை | - | குட்டி | சிங்கம் | - | குருளை |
| குரங்கு | - | பறள்/குட்டி | பூனை | - | குட்டி/பறள் |
| தவளை | - | பேத்தை/குஞ்சு | நாய் | - | குட்டி/குருளை |
| கிளி | - | குஞ்சு/பிள்ளை | காகம் | - | குஞ்சு |
| ஆமை | - | குஞ்சு | புலி | - | குட்டி |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சை | - | கன்று | கமுகு | - | கன்று பிள்ளை |
| வேம்பு | - | கன்று | நெல் | - | நாற்று |
| தென்னை | - | பிள்ளை | பனை | - | வடலி |
| மா, பலா | - | கன்று | புகையிலை | - | நாற்று |
| வாழை | - | குட்டி/கன்று | நாணல் | - | நாற்று |
| மூங்கில் | - | கன்று | மான் | - | குட்டி/கன்று |
| மீன் | - | குஞ்சு | எலி | - | குஞ்சு |
| யானை | - | போதகம், கன்று, குட்டி | | | |

## ஆண் பெண் மரபுப் பெயர்கள்

| உயிரினம் | ஆண் | பெண் |
|---|---|---|
| ஆடு | கடா | மறி |
| மாடு | ஏறு,காளை,எருது | நாகு,பசு |
| கோழி | சேவல் | பேடு,பெட்டை |
| நாய் | கடுவன் | பெட்டை |
| யானை | களிறு | பிடி |
| குரங்கு | கடுவன் | மந்தி |
| பூனை | கடுவன் | பெட்டை |
| மான் | கலை | பிணை |
| குதிரை | குண்டு | வடவை,பெட்டை |
| மயில் | போத்து | அளகு |
| பன்றி | களிறு | பிணை |
| புலி | போத்து | பிணா |
| நரி | ஓரி | பாட்டி |
| நண்டு | அலவன் | பெட்டை,பெடை |

## பிஞ்சு மரபுப் பெயர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தென்னை | - | குரும்பை | பனை | - | நுங்கு |
| மா | - | வடு | வாழை | - | கச்சல் |
| பலா | - | மூசு | பூசணி | - | பிஞ்சு |
| கத்தரி | - | பிஞ்சு | | | |



Printed By : ANF TECH - 077 366 46 19

## வித்து மரபுப் பெயர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆமணக்கு | -முத்து | பலா,புளி | - | கொட்டை |
| மிளகாய் | -வித்து | கத்தரி | - | விதை |
| நெல் | -மணி | சோளம் | - | மணி |
| தினை | -மணி | பாகல்,பூசணி | - | விதை |
| கொய்யா | -விதை | நிலக்கடலை | - | பருப்பு |
| வேம்பு | - விதை/கொட்டை | | | |
| பப்பாளி | - விதை/கொட்டை | | | |

## இலை,தொகுதி மரபுப் பெயர்கள்

### இலை மரபுப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| வாழை | - | இலை |
| மா | - | இலை |
| தென்னை | - | ஓலை |
| பனை | - | ஓலை |
| நெல் | - | தாள் |
| புல் | - | தாள் |
| கமுகு | - | ஓலை |
| ஈச்சை | - | ஓலை |
| தாழை | - | ஓலை |

### தொகுதி மரபுப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| பூ | - | மஞ்சரி |
| வாழை | - | குலை |
| முந்திரி | - | குலை |
| ஈஞ்சு | - | குலை |
| பனை | - | குலை |
| தென்னை | - | குலை |
| மா | - | கொத்து |
| புளி | - | கொத்து |
| நெல் | - | கதிர் |
| சோளம் | - | கதிர் |
| திராட்சை | - | குலை |

## உள்ளீட்டு மரபுப் பெயர்கள்

| தாவரம் | | உள்ளீடு | தாவரம் | | உள்ளீடு |
|---|---|---|---|---|---|
| நெல் | - | அரிசி | கோதுமை | - | அரிசி |
| உழுந்து | - | பருப்பு | அவரை | - | பருப்பு |
| மா / வாழை | - | சதை | பலா / தோடை | - | சுளை |
| கற்றாளை | - | சோறு | பயறு | - | பருப்பு |
| வரகு / நெல் | - | அரிசி | தினை | - | அரிசி |



Printed By : ANF TECH - 077 366 46 19

# கூட்டத்தைக் குறிக்கும் மரபுச் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அறிஞர் | - | அவை | சுருட்டு | - | கட்டு |
| நடிகர் | - | குழு | ஆடு | - | மந்தை |
| ஆசிரியர் | - | குழாம் | படை | - | அணி |
| சனம் | - | கும்பல்/திரள் | ஆனை | - | பந்தி |
| மக்கள் | - | தொகுதி/கூட்டம் | நாடகம் | - | குழு/கோஷ்டி |
| மான் | - | கூட்டம் | புத்தகம் | - | அடுக்கு |
| எறும்பு | - | கூட்டம் | மலை | - | தொடர் |
| உடு | - | திரள் | கள்வர் | - | கூட்டம் |
| ஆ/பசு | - | நிரை | புல் | - | கற்றை |
| மா | - | சோலை | வைக்கோல் | - | கற்றை |
| திறப்பு | - | கோவை | நெல் | - | குவியல் |
| பூ | - | கொத்து/மஞ்சரி | புகையிலை | - | சிப்பம் |
| தென்னை | - | தோப்பு | மலை | - | தொடர் |
| கல் | - | குவியல் | சலாகை | - | கட்டு |
| சேனை | - | திரள் | பல் | - | வரிசை |

| | | |
|---|---|---|
| ஆடு மேய்ப்பவன் | - | இடையன் |
| வாகனம் ஓட்டுபவன் | - | சாரதி |
| தேர் செலுத்துபவன் | - | பாகன் |
| உலங்கு வானூர்தி செலுத்துபவன் | - | வலவன் |
| யானை செலுத்துபவன் | - | பாகன் |
| கப்பல் ஓட்டுபவன் | - | மீகாமன்/மாலுமி |
| மட்பாண்ட வேலை செய்பவன் | - | குயவன் |
| விமானம் செலுத்துபவன் | - | வலவன்/விமானி |
| கட்டட வேலை செய்பவன் | - | கொத்தன் |
| மரத் தளபாடங்கள் செய்பவன் | - | தச்சன் |
| சட்டி,பானை வனைபவன் | - | குயவன் |
| மீன் பிடிப்பவன் | - | மீனவன் /செம்படவன் |
| சிலை வடிப்பவன் | - | சிற்பி |
| தன் நாட்டை நேசிப்பவன் | - | தேசாபிமானி/தேசப்பற்றாளன் |
| மனிதர்களை ஆற்றின் அக்கரைக்குக் கொண்டு செல்பவன் | - | படகோட்டி /ஓடக்காரன் |



Printed By : ANF TECH - 077 366 46 19

## பிராணிகளின் மலங்களின் மரபுப் பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| பறவை | - எச்சம் | குதிரை | - இலத்தி/இலண்டம் |
| யானை | - இலத்தி/இலண்டம் | கழுதை | - விட்டை |
| மாடு | - சாணம் | ஒட்டகம் | - இலத்தி/இலண்டம் |
| எருது | - சாணம் | ஆடு | - பிழுக்கை |

# தொடர் மொழிக்கு ஒரு மொழி

**அகராதி** - அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறும் நூல்.

**அந்தப்புரம்** - அரண் மனையில் அரச பெண்கள் தங்குமிடம்.

**அலலி/பேடி** - ஆணும் பெண்ணும் அல்லாத நிலை.

**அணிந்துரை** - ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த ஏனையோர் வழங்கும் புகழுரை.

**அட்டாவதானி** - ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்க கூடியவன்

**அல்லங்காடி** - மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை.

**அகால மரணம்** - எதிர்பாராத சந்தர்ப்பத்தில் திடரென ஏற்படும் மரணம்

**அரங்கேற்றம்** - கலை நிகழ்ச்சி ஒன்றினை பலரும் அறியும்படி மேடையேற்றல்

**அழைப்பாணை** - குறித்த தினத்தில் நீதி மன்றத்துக்கு வருமாறு நீதிபதியால் ஒருவருக்கு விடுக்கப்படும் ஆணை.

**அகதி** - தமது அனைத்து உடைமைகளையும் இழந்தவன்.

**அன்பளிப்பு** - அன்பின் அடிப்படையில் ஒருவருக்கு வழங்கப்படுவது.

**அநாதை** - தாய் தந்தையரை இழந்தவன்.

**அபிநயம்** - உள்ளக் கருத்துக்களை அங்க அசைவுகள் மூலம் வெளிப்படுத்துதல்.

**வாதி** - வழக்கை தாக்கல் செய்பவன்

**பிரதிவாதி** - வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன்



Printed By : ANF TECH - 077 366 46 19

| | |
|---|---|
| சுயம்பு | - ஒருவராலும் படைக்கப்படாது தானே தோன்றியது. |
| சுருங்கை | - நிலத்தின் கீழ் அமைக்கப்படும் இரகசிய வழி |
| திறைசேரி | - அரசாங்கத்தின் நிதி சம்பந்தமான விடயங்களை செயற்படுத்தும் இடம். |
| தபுதாரன் | - மனைவியை இழந்தவன். |
| விதவை | - கணவனை இழந்தவள். |
| தீர்க்கதரிசி | - நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன் |
| நூலகம் | - வாசிப்பதற்கென புத்தகங்களை அடுக்கி வைக்கப் - படும் இடம். |
| நூதனசாலை | - புராதனப் பொருட்களை சேகரித்து வைக்கும் இடம். |
| பரிவேடம் | - சூரியன், சந்திரனைச் சுற்றி தோன்றும் ஒளி வட்டம். |
| பன்னசாலை | - முனிவர்கள் வசிக்கும் இடம். |
| உலோபி | - பொருளைத் தேடி எவருக்கும் ஈயாது வைத்திருப்பவன். |
| வள்ளல் | - அனைவருக்கும் இல்லையென்னாது வாரி வழங்குபவன். |
| சந்தி | - தெருக்கள் கூடும் இடம். |
| ஆயுட்காலம் | - ஒருவர் பிறந்து, இறக்கும் வரை உள்ள காலம். |
| தினசரி | - ஒவ்வொரு நாளும் வெளிவரும் பத்திரிகை. |
| வங்கி | - பணக் கொடுக்கல் வாங்கல் செய்யும் இடம். |
| சந்தை | - பொருட்களை விற்பதற்கும் வாங்குவதற்குமுரிய இடம் |
| தொழிற்சாலை | - பொருட்களை உற்பத்தி,செய்யும் இடம். |
| சகபாடி | - ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன். |
| தாய்நாடு | - தான் பிறந்த நாடு |
| தற்கொலை | - தானே தன் உயிரைப் போக்குதல். |
| வெள்ளோட்டம் | - புதிதாக செய்த தேர், வண்டி, கப்பல் முதலியவற்றை முதன் முதலாகச் செலுத்துதல். |
| லயம் | - தேயிலைத் தோட்டத் தொழிலாளர் தங்கியிருக்குமிடம் |
| மஞ்சரி | - ஒரு தண்டிலே பல மலர்கள் சேர்ந்துள்ள பூங்கொத்து. |
| குறிஞ்சி | - மலையும் மலை சார்ந்த இடமும். |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | |
|---|---|---|
| அசகாய சூரர் | - | துணையின்றி தனித்து காரியத்தை முடிப்பவன் |
| அடிமை | - | சுதந்திரமற்று வாழ்பவன் |
| அந்தப்புரம் | - | அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் |
| ஆத்திகன் | - | கடவுள் இருக்கிறான் என நம்புபவன். |
| நாத்திகன் | - | கடவுள் இல்லையென்று வாதிடுபவன் |
| ஆதனம் | - | ஒருவருக்கு உரித்தான சொத்து. |
| ஏகபோகம் | - | ஒருவர் முழுப் பொருளையும் தனித்து அனுபவித்தல். |
| ஆச்சிரமம் | - | முனிவர்கள் வாழும் இடம். |
| ஊதாரி | - | வீண் செலவு செய்பவன். |
| உவமானம் | - | ஒரு பொருளுக்குப் பதிலாக கூறப்படும் மற்றொரு பொருள். |
| சுயநலவாதி | - | மற்றையவர்களைப் பற்றிய அக்கறையில்லாதவன். |
| சுயசரிதை | - | ஒருவர்/ ஒரு பொருள் தானே தன் கதையைக் கூறுவது |
| முகவுரை | - | ஒருவர் தனது நூலைப் பற்றி தானே எழுதும் உரை. |
| ஒத்திகை | - | கலை நிகழ்ச்சிகளை மேடையேற்ற முன் சரி,பிழை பார்த்தல் |
| கட்டுக்கதை | - | ஆதாரம் இல்லாத செய்தி |
| தீர்ப்பு | - | விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது |
| கப்பம் | - | பகையரசருக்கு வழங்கப்படும் திறைப் பொருள் |
| களஞ்சியம் | - | பொருள், பண்டங்களைச் சேமித்து வைக்கும் இடம் |
| கலைக்களஞ்சியம் | - | அறிவுத்துறைகள் சார்ந்த அனைத்து விடயங்களையும் திரட்டித் தரும் நூல் |
| கைம்மருந்து | - | வைத்தியர் இன்றி தாமே தமது நோய்க்குச் செய்யும் மருந்து. |
| சதாப்தம் | - | நூறு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி. |
| தசாப்தம் | - | பத்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி. |
| சதாவதானி | - | ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் கொண்டவன். |
| தசாவதானி | - | ஒரே சமயத்தில் பத்து விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் கொண்டவன். |
| சிரஞ்சீவி | - | நெடுங்காலம் வாழ்பவன். |



Printed By : ANF TECH - 077 366 46 19

முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்.
மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்.
நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்.
பாலை - பாலைவனமும் பாலைவனம் சார்ந்த இடமும்
துறைமுகம் - கப்பல்கள் நங்கூரமிட்டு தரித்திருக்குமிடம்.
கவசம் - உடலைப் பாதுகாக்க உலோகத்தால் செய்த ஆடை.
சஞ்சிகை - மாதமொரு முறை வெளி வரும் பத்திரிகை.
ஐவகை நிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
ஐங்குரவர் - தாய், தந்தை, உபாத்தியாயன், அரசன், தமையன்
முக்கலைகள் - இயல், இசை, நாடகம்
முக்கனிகள் - மா, பலா, வாழை
விகடகவி - விகடமாகவும், நகைச்சுவையாகவும் பேசுபவன்.
அடிவானம்/தொடுவானம் - - ஆகாயமும் கடலும் ஒன்றையொன்று தொடுவது போல் தோன்றும் காட்சி.
கைதி - சிறைத் தண்டனை பெற்றவன்
நடத்துனர் - பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர்
வேட்பாளர் - தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவன்
வாக்காளர் - தேர்தல் ஒன்றில் வாக்களிப்பவர்

## எழுத்து வழு நீக்கி எழுதுதல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எண்ணை | - | எண்ணெய் | பரீட்ச்சை | - | பரீட்சை |
| வெண்ணை | - | வெண்ணெய் | சிகப்பு | - | சிவப்பு |
| வெய்யில் | - | வெயில் | கவச்சி | - | கவர்ச்சி |
| காச்சல் | - | காய்ச்சல் | கைமாறு | - | கைம்மாறு |
| முயற்ச்சி | - | முயற்சி | வெண்காயம் | - | வெங்காயம் |
| துறப்பு | - | திறப்பு | வெத்திலை | - | வெற்றிலை |
| இளனி | - | இளநீர் | எழுட்சி | - | எழுச்சி |
| வேர்வை | - | வியர்வை | உயச்சி | - | உயர்ச்சி |
| வைக்கல் | - | வைக்கோல் | | | |


Printed By : ANF TECH - 077 366 46 19

# வாடிக்கையாளர்களே!

## எங்களிடம்,






**போட்டோ பிரதிகள்**

**வர்ணப் பிரதிகள்**

**மின்சாரக் கட்டணங்கள்**

**நீர்க்கட்டணங்கள்**



**லெமினேட்டிங்**

## போன்ற சேவைகளை பெற்றுக் கொள்ளலாம்.

ANF TECH


01ம் குறிச்சி மார்கட் முன்பாக,
இலக்கம் 222/5, ஊர் வீதி - காத்தான்குடி 01.
தொலைபேசி இலக்கம் : 077 366 4619
EMAIL: anftechkky@gmail.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கத்திரிக்கோல் | - | கத்தரிக்கோல் | குலைத்தல் | - | குரைத்தல் |
| கோடாலி | - | கோடரி | இளனி | - | இளநீர் |
| பயத்தங்காய் | - | பயற்றங்காய் | பிரட்ச்சினை | - | பிரச்சினை |
| சிவர் | - | சுவர் | இங்கனம் | - | இங்ஙனம் |
| சிலவு | - | செலவு | கோவில் | - | கோயில் |
| சமயல் | - | சமையல் | கச்சி | - | கட்சி |
| கட்டிடம் | - | கட்டடம் | புகட்ச்சி | - | புகழ்ச்சி |
| புடவை | - | புடைவை | மலட்சி | - | மலர்ச்சி |
| நாப்பது | - | நாற்பது | இலச்சணம் | - | இலட்சணம் |
| முன்னூறு | - | முந்நூறு | பாவக்காய் | - | பாகற்காய் |
| ஆராட்சி | - | ஆராய்ச்சி | கருவப்பிலை | - | கறிவேப்பிலை |
| சீயக்காய் | - | சிகைக்காய் | தேத்தண்ணி | - | தேநீர் |
| தவக்கை | - | தவளை | உயட்சி | - | உயர்ச்சி |
| சவக்காரம் | - | சவர்க்காரம் | ஒத்தணம் | - | ஒற்றடம் |
| நாநூறு | - | நானூறு | கருப்பு | - | கறுப்பு |
| இகட்சி | - | இகழ்ச்சி | பத்தொம்பது | - | பத்தொன்பது |
| பிலாப்பழம் | - | பலாப்பழம் | கத்திரிக்காய் | - | கத்தரிக்காய் |
| சுகயீனம் | - | சுகவீனம் | வெள்ளாமை | - | வேளாண்மை |
| கம்பிளி | - | கம்பளி | கிராணம் | - | கிரகணம் |
| நோம்பு | - | நோன்பு | நாகரீகம் | - | நாகரிகம் |
| புண்ணாக்கு | - | பிண்ணாக்கு | ஆத்தங்கரை | - | ஆற்றங்கரை |
| புட்டு | - | பிட்டு | கடக்கரை | - | கடற்கரை |
| போயிலை | - | புகையிலை | ஈக்கில் | - | ஈர்க்கு |
| ஒட்டறை | - | ஒட்டடை | ஆம்பிளை | - | ஆண்பிள்ளை |
| விதரம் | - | விரதம் | தெண்டம் | - | தண்டம் |
| இலட்சினை | - | இலச்சினை | நற்சத்திரம் | - | நட்சத்திரம் |
| அறிஞ்சர் | - | அறிஞர் | தலகணி | - | தலையணை |
| கலாச்சாரம் | - | கலாசாரம் | அருவாள் | - | அரிவாள் |
| வரட்ச்சி | - | வறட்சி | கிணத்தடி | - | கிணற்றடி |
| பயிற்ச்சி | - | பயிற்சி | வெக்கம் | - | வெட்கம் |



Printed By : ANF TECH - 077 366 46 19

# இரட்டைக் கிளவி

ஒரு சொல் தனித்து பொருள் தராது அதே சொல் இரண்டு முறை வந்து கருத்தினை வெளிப்படுத்துமாயின் அச் சொல் /இரட்டைக்கிளவி எனப்படும்.

**உதாரணம் :** சல என்ற சொல்லை தனித்து எழுதும் போது பொருள் தராது.

/சல சல என இரு முறை எழுதும் போது பொருள் தரும்

| இரட்டைக்கிளவி | உணர்த்தும் கருத்து |
|---|---|
| பள பள | மின்னுதல் |
| விறு விறு | விரைவாக |
| கல கல | சிரித்தல் |
| மள மள | கண்ணில் நீர் வடிதல் |
| கடு கடு | கோபமாக பேசுதல் |
| சல சல | நீர் ஓடும் இசை |
| கிளு கிளு | சிரித்தல் |
| குளுகுளு | இதமான காற்று /குளிர் |
| கட கட | வண்டி செல்லும் ஓசை |
| நற நற | பல்லைக் கடித்தல் |
| சிடு சிடு | கோபமான பேச்சு/முகம் |
| பர பர | இழுத்தல் |
| பட பட | முறிதல் /துடித்தல் |
| மொழு மொழு | வளர்ச்சி |
| டாண் டாண் | மணி ஒலி |
| கணீர் கணீர் | மணி ஒலி |
| பொல பொல | கண்ணில்நீர் வடிதல் /பொழுது விடிதல் |
| தக தக | மின்னுதல் |
| பளார் பளார் | கன்னத்தில் அறைதல் |
| திரு திரு | விழித்தல் |
| சுள் சுள் | வலித்தல் |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | |
|---|---|
| சுறு சுறு - கோபம் | வழ வழ - பேச்சு |
| விண் விண் - வலித்தல் | கலீர் கலீர் - சலங்கை ஒலி |
| கண கண - உடம்புச் சூடு | கம கம - மணம் வீசுதல் |
| திடு திடு - விரைவான ஓட்டம் | குடுகுடு - நடத்தல் |
| விசுக் விசுக் - வேகமான நடை | சட சட - முறிதல் |
| சடார் சடார் - காற்று வீசுதல் | கிடு கிடு - அச்சம் |
| வெடு வெடு - கோபமான பேச்சு | |
| மொர மொர - உண்ணுதல்/கடித்தல் | |
| குபீர் குபீர் - இரத்தம் வடிதல் | |
| பளீர் பளீர் - மின்னல் மின்னுதல் | |

# இணை மொழிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அக்கம்பக்கம் | - | அருகருகே | உயர்வு தாழ்வு | - | நிலையற்றது |
| உற்றார் உறவினர் | - | உறவினர்கள் | குணம்குற்றம் | - | நல்லது கெட்டது |
| பட்டம்பதவி | - | உயர்நிலை | இன்ப துன்பம் | - | சுகதுக்கம் |
| கள்ளங்கபடம் | - | தெளிவான மனம் | ஏற்றஇறக்கம் | - | முன்னேற்றமும்பணிவும் |
| ஏழை எளியவர் | - | மிகவறியவர் | கனவுநனவு | - | பொய்யும் உண்மையும் |
| சாக்குப் போக்கு | - | தட்டிக்கழித்தல் | மூலை முடுக்கு | - | எல்லா இடமும் |
| உண்டு உடுத்து | - | அனுபவித்தல் | நோய்நொடி | - | பிணி வருத்தம் |
| ஆற அமர | - | ஆறுதலாக | மலையும்மடுவும் | - | மேடு பள்ளம் |
| மூச்சுப் பேச்சு | - | பேச்சற்ற நிலை | அல்லும்பகலும் | - | தினமும் |

| | |
|---|---|
| ஆக்கமுங்கேடும் - | நல்லதும்கெட்டதும் |
| கண்ணுங்கருத்தும் - | மிகஅவதானமாக |
| மேல்கீழ் - | உயர்ந்ததும் தாழ்ந்ததும் |
| விருப்புவெறுப்பு - | விரும்புதலும் வெறுத்தலும் |



Printed By : ANF TECH - 077 366 46 19

| இணை மொழிகள் | பொருள் |
|---|---|
| கையும் மெய்யும் | மிகத் தெளிவாக |
| நகமும் சதையும் | மிக ஒற்றுமை |
| சுற்றும் முற்றும் | எல்லா இடமும் |
| ஆய்ந்து ஓய்ந்து | அவதானமாக |
| ஆடிப்பாடி | சந்தோசமாக |
| வாடிவதங்கி | மிகவும் களைப்புற்று |
| தாறுமாறு | எல்லையில்லாத |
| கண்ணீரும் கம்பலையும் | மிகவும் துன்பமான நிலை |
| சொத்து சுகம் | வசதியான வாழ்க்கை |
| சீருஞ்சிறப்பும் | உயர்வான நிலை |
| அருமை பெருமை | உயர்நிலை |
| எலும்பும் தோலும் | மிக மெலிந்த |
| ஒட்டி உலர்ந்த | மிக மெலிந்த |
| காய்ந்து கறுத்து | மிகக் கறுத்து |
| தப்பித் தவறி | தவறுதலாக |
| திட்டவட்டமாக | உறுதியாக |
| துணிமணி | உடைகள் |
| காரசாரமாய் | கடுமையாக |
| உண்டு உடுத்து | அனுபவித்தல் |
| நோய்நொடி | பிணி வருத்தம் |
| மலையும் மடுவும் | மேடு பள்ளம் |



Printed By : ANF TECH - 077 366 46 19

## இரட்டைக்கிளவிகளை கொண்டு அமைந்த வாக்கியங்கள்

| | | |
|---|---|---|
| கலகல | : | அவன் **கலகல**வென்று சிரித்தான். |
| கணீர்கணீர் | : | ஆலயமணி **கணீர்கணீர்** என்று ஒலித்தது. |
| குடுகுடு | : | பாட்டி **குடுகுடு** வென்று நடந்து சென்றார். |
| கிறுகிறு | : | தலை **கிறுகிறு** என்று சுற்றியது. |
| கமகம | : | மல்லிகைப்பூ **கமகம**வென்று வாசம் வீசியது. |
| சலசல | : | ஆற்று நீர் **சலசல**வென்று ஓடியது. |
| சலசல | : | அவனது மனம் **படபட**வென்று அடித்தது. |
| பளபள | : | தங்க நகைகள் **பளபள**வென்று மின்னின. |

## இணை மொழிகளைக் கொண்டு அமைந்த வாக்கியங்கள்

- சுதர்சன் தனது குடும்பத்திற்காக **அல்லும் பகலும்** பாடுபட்டான்.
- திருமண ஏற்பாடுகள் **தடல் புடலாக** நடைபெறுகின்றன.
- **ஆடிப்பாடி** வேலை செய்தால் அலுப்பிருக்காது என்று கூறுவார்.
- **ஏழை எளியவர்களுக்கு** வாரி வழங்குதல் சிறந்த பண்பாகும்.
- எனது பாடசாலையின் **பேரும் புகழும்** நாடெங்கும் பரவியது.
- **கரடு முரடான** பாதையூடாக செல்லும் போது கவனமாகச் செல்ல வேண்டும்.
- நாம் பெரியவர்களுடன் **ஏட்டிக்குப் போட்டியாக** நடந்து கொள்ளக்கூடாது.
- பொலிசார் திருடனைக் **கையும் மெய்யுமாகப்** பிடித்தனர்.
- புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நிஸாமை ஆசிரியர்கள் **போற்றிப் புகழ்ந்தனர்**.
- அவர் **ஈயெறும்பு**களுக்குக் கூட தீங்கு செய்ய நினைக்கமாட்டார்.
- வழி தவறிய நாங்கள் **காடும் மேடும்** அலைந்து திரிந்தோம்.
- **குப்பை கூளம்** தேங்காது சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
- வாழ்வில் **நோய் நொடி** இன்றி வாழ்வதே சிறந்த செல்வமாகும்.



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | |
|---|---|---|
| நிரைநிரையாக | கொத்துக்கொத்தாக | அழுகைஅழுகையாய் |
| அழுகைஅழுகையாக | கூட்டங்கூட்டமாய் | சிரிப்புச்சிரிப்பாக |
| கூடைகூடையாய் | குடங்குடமாய் | தெருத்தெருவாய் |
| சுவைத்துசுவைத்து | அள்ளிஅள்ளி | துள்ளித்துள்ளி |
| பாய்ந்துபாய்ந்து | மடக்கிமடக்கி | சுற்றிச்சுற்றி |
| காலங்காலமாய் | வண்ணம்வண்ணமான | நாடுநாடாய் |

## பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள்

| சொல் | பெயர் | வினை |
|---|---|---|
| அடி | பாதம் | அடித்தல் |
| அமர் | போர் | அமர்தல் |
| அலை | கடலலை | திரிதல் |
| இரை | உணவு | சத்தம்/ஒலி |
| உடை | ஆடை | உடைத்தல் |
| கலை | வித்தை | கலைத்தல் |
| நகை | அணிகலன் | சிரி |
| நாடு | தேசம் | தேடு/செல் |
| படி | படிக்கட்டு | கற்றல் |
| பாய் | விரிப்பு | பாய்தல் |
| அரி | சிங்கம் | அரிதல் |
| ஆடி | மாதம் | ஆடுதல் |
| பார் | வையகம் | நோக்கு |
| அறை | பகுதி | அடித்தல் |
| ஆடு | மிருகம் | ஆடுதல் |
| களை | பயிர்க்களை | சோர்வு/களைப்பு |
| பணி | செயல் | கட்டளை |
| அரை | பாதி | அரைத்தல் |
| முடி | மயிர் | நிறைவு |
| கரை | ஓரம் | கரைதல் |
| குடி | மக்கள் | பருகுதல் |
| பறி | மீன்பிடி கருவி | பறித்தல் |
| அணி | குழு | அணிதல் |



Printed By : ANF TECH - 077 366 46 19

## கணினி கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| வையக விரிவுவலை | - | World Wide Web |
| பதிவிறக்கம் | - | Browser |
| பதிவேற்றம் | - | Upload |
| இணையத்தளம் | - | Website |
| மின்னஞ்சல் | - | E-mail |
| கோப்பு | - | File |
| மென்பொருள் | - | Software |
| வன்பொருள் | - | Hardware |
| எழுத்துரு | - | Font |
| இணையம் | - | Internet |
| இறுவட்டு | - | CD |
| வன்தகடு | - | Hard disc |
| விசைப்பலகை | - | Keyboard |
| குறிப்புச்சொல் | - | Password |
| சேமி | - | Save |
| நீக்குக | - | Delete |
| வலை | - | Web |

## அறிவுரைகள்

- தினமும் எட்டு மணி நேரம் உறங்குங்கள்.
- கடிகாரத்தின் உதவியுடன் நீங்களே காலையில் எழுந்துவிடுங்கள்.
- அப்போதுதான் பாடசாலைக்குப் பதற்றம் இல்லாமல் செல்ல முடியும்.
- பற்றூரிகையை எப்போதும் ஒரே இடத்தில் வையுங்கள்.
- குளிப்பதில் இருந்து பள்ளி செல்லத் தயாராவது வரை உங்கள் வேலைகளை நீங்களே செய்து கொள்ளுங்கள்.
- பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் பாதணி, புத்தகப்பை போன்றவற்றை அதற்குரிய இடங்களில் வையுங்கள்.
- அதன் பின்னர் கைகால் முகம் கழுவுங்கள்ளு உணவு உண்ணுங்கள்.
- மாலையில் சிறிது நேரம் விளையாடுங்கள்.
- பின்னர் வீட்டுப் பாடங்களை எழுதுங்கள்ளு படியுங்கள்.
- எத்தகைய பிரச்சினை என்றாலும் அதை அம்மாவிடம் மறைக்காமல் சொல்லுங்கள்.



Printed By : ANF TECH - 077 366 46 19

# பெயர்ச் சொற்கள்

ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொற்கள் யாவும் **பெயர்ச் சொற்கள்** எனப்படும். பெயர்ச் சொற்கள் ஆறு வகைப்படும்.

## 1. பொருட் பெயர்

பொருட்கள், ஆட்கள் என்பனவற்றின் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் பொருட்பெயர்ச் சொற்கள் ஆகும்.

உ+ம் :- காற்று , மரம், பேனை, புத்தகம், பந்து, விமலா, நிஸாம், கிளி, தொலைபேசி, வானொலி, கடிகாரம், மேசை, கதிரை

## 2. இடப்பெயர்

இடங்களின் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் இடப்பெயர்ச் சொற்கள் ஆகும்.

உ+ம் :- மலை, கடல், மைதானம், வீடு, பாடசாலை, கிராமம், இலங்கை, இந்தியா, மாத்தளை, யாழ்ப்பாணம், வயல், தோட்டம், பாதை, தேசம்

## 3. காலப்பெயர்

காலங்களின் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் காலப்பெயர்ச் சொற்கள் ஆகும்.

உ+ம் :- நிமிடம், மணித்தியாலம், நாள், மாதம், வாரம், வருடம், இரவு, பகல், காலை, நேற்று, நாளை, மாசி மாதம், திங்கட்கிழமை

## 4. சினைப்பெயர்

ஒன்றின் உறுப்புக்களின் பெயரைக் குறிப்பது சினைப் பெயராகும்.
உ+ம் :- இலை, கை, தலை,கிளை, வேர், பூ, வால், தளிர், மூக்கு, பல், செவி

## 5. குணப்பெயர்

நிறம்,சுவை,வடிவம் முதலிய பண்புகளைக் குறிக்கும் சொற்கள் குணப்பெயர்ச் சொற்களாகும்.
உ+ம் :- வெண்மை,கறுப்பு, வட்டம்,முக்கோணம், நன்மை, இனிப்பு, சூடு,



Printed By : ANF TECH - 077 366 46 19

### 6. தொழிற்பெயர்

ஒரு தொழிலை அல்லது செயலைக் குறிக்கும் சொற்கள் தொழிற் பெயர்ச் சொற்களாகும்.

உ+ம் :- ஆடுதல், பாடுதல், படித்தல், வருதல் , சிரித்தல், வரைதல்

## வினைச்சொற்கள்

ஒரு செயல் நிகழ்ந்தமையைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.

வினைச் சொற்கள் ஒரு செயலை உணர்த்துவதுடன் எப்போதும் ஏதாவதொரு காலத்தைக் காட்டி நிற்கும்.

உ+ம் :- ஓடினான், படித்தான், பாடினான், பறக்கின்றன, விளையாடினர், ஓடுகிறது

**வினைச் சொற்கள் வாக்கியங்களில் இரண்டு வகைகளில் இடம்பெறும்.**

### I. முற்று வினை

ஒரு செயல் முடிந்து நிற்பது **முற்று** அல்லது **வினை முற்று** எனப்படும்

உ+ம் :- பேசினேன், பாடுகின்றான், கேட்கிறாய், தூங்குவான், உண்டான்

### உ. எச்ச வினை

ஒரு செயல் முடியாது எஞ்சி நிற்பது **எச்சம்** ஆகும்.

உ+ம் :- குளித்த, வந்த, உண்ட, பார்த்து, மறைந்த,பாடிய, சென்று,ஆடி, பாடி

**எச்ச வினைகள் இரண்டு வகைப்படும்.**

**I. பெயரெச்சம்** - ( முற்றுப் பெறாத வினையொன்று பெயருடன் முடிதல்)

உ+ம் :-

**ஓடிய** சிறுவன் - **அழுத** பிள்ளை - **வந்த** சிறுமி - **குரைத்த** நாய்
**பறந்த** கிளி - **வரைந்த** ஓவியம் - **கிழிந்த** உடை - **விழுந்த** மரம்

**உ. வினையெச்சம்** - (முற்றுப் பெறாத வினையொன்று இன்னொரு வினையுடன் முடிதல்)

**சிரித்து** மகிழ்ந்தான் - **ஓடி** வந்தான் - **அழுது** புலம்பினான்
**பறந்து** சென்றன - **கதறி** அழுதான் - **சரிந்து** வீழ்ந்தது
**பார்த்து** வந்தான் - **நடந்து** வந்தான் - **பழுத்து** விழுந்தது



Printed By : ANF TECH - 077 366 46 19

# ஒத்த கருத்துச் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அன்பு | - | பாசம் | மனம் | - | உள்ளம் |
| அரவம் | - | பாம்பு | அலர் | - | பூ/மலர் |
| அரசன் | - | மன்னன் | அக்கினி | - | நெருப்பு/தீ |
| அடவி | - | காடு | அருவி | - | ஆறு/நதி |
| அகழி | - | கிடங்கு | அரை | - | பாதி |
| அரி | - | சிங்கம் | அச்சம் | - | பயம்/பீதி |
| அலை | - | திரை | அறம் | - | தருமம் |
| அச்சம் | - | பயம்/பீதி | அழகு | - | எழில் |
| அடர்த்தி | - | நெருக்கம் | அந்தரம் | - | வானம்,வெளி |
| அணங்கு | - | பெண் | அபராதம் | - | தண்டனை |
| அதிசயம் | - | புதுமை | அண்மை | - | சமீபம் |
| அந்தம் | - | முடிவு | அம்பு | - | பாணம் |
| அபாயம் | - | ஆபத்து | அழிவு | - | சேதம்/கேடு |
| நீர் | - | புனல் | அதிகாலை | - | வைகறை |
| காடு | - | வனம் | ஆகாயம் | - | வானம் |
| துன்பம் | - | கவலை | ஆகாரம் | - | உணவு |
| ஆசை | - | விருப்பம் | ஆசை | - | விருப்பம் |
| அழல் | - | நெருப்பு | ஆக்கினை | - | தண்டனை |
| அழுக்காறு | - | பொறாமை | ஆசனம் | - | இருக்கை |
| அளி | - | வண்டு | ஆசான் | - | ஆசிரியன் |
| அளை | - | புற்று | ஆசி | - | வாழ்த்து |
| அறிவு | - | ஞானம் | ஆசு | - | குற்றம் |
| அனல் | - | நெருப்பு | அடிசில் | - | உணவு |
| அன்னம் | - | சோறு | ஆடை | - | உடை |
| அரி | - | சிங்கம் | ஆ | - | பசு |
| அகம் | - | உள்ளம் | ஆணவம் | - | செருக்கு |
| அன்னை | - | தாய் | ஆணை | - | கட்டளை |
| அகவை | - | வயது | ஆனை | - | யானை |
| அகிலம் | - | உலகம் | ஆதி | - | தொடக்கம் |
| அலுவல் | - | விடயம் | ஆபத்து | - | இடையூறு |



Printed By : ANF TECH - 077 366 46 19

# வாடிக்கையாளர்களே!

## எங்களிடம்,






**போட்டோ பிரதிகள்**

**வர்ணப் பிரதிகள்**

**மின்சாரக் கட்டணங்கள்**

**நீர்க்கட்டணங்கள்**



**லெமினேட்டிங்**

**போன்ற சேவைகளை பெற்றுக் கொள்ளலாம்.**

ANF TECH

01ம் குறிச்சி மார்கட் முன்பாக,
இலக்கம் 222/5, ஊர் வீதி - காத்தான்குடி 01.
தொலைபேசி இலக்கம் : 077 366 4619
EMAIL: anftechkky@gmail.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தம் | – | குருதி | ஒளி | – | வெளிச்சம் |
| இரத்தல் | – | வேண்டுதல் | வாசம் | – | மணம் |
| இரை | – | உணவு | பணம் | – | காசு |
| இலகு | – | எளிது | மகிழ்ச்சி | – | சந்தோசம் |
| இலக்கு | – | குறி | மறம் | – | வீரம் |
| இன்னல் | – | துன்பம் | வாய்மை | – | சத்தியம் |
| பாணம் | – | அம்பு | பண் | – | இசை |
| ஈசன் | – | கடவுள் | தழல் | – | நெருப்பு |
| ஈதல் | – | கொடுத்தல் | கூடுதல் | – | சேர்தல் |
| உண்டி | – | உணவு | நாடு | – | தேசம் |
| உதயம் | – | தோற்றம் | நூல் | – | புத்தகம் |
| உதிரம் | – | இரத்தம் | பயன் | – | பிரயோசனம் |
| உத்தி | – | தந்திரம் | பக்கத்தில் | – | அருகில் |
| உபகாரம் | – | உதவி | பெருமை | – | சிறப்பு |
| உவகை | – | மகிழ்ச்சி | நாள் | – | தினம் |
| உள்ளம் | – | மனம் | சினம் | – | கோபம் |
| உறையுள் | – | வீடு | வேதனை | – | நோவு |
| உலகம் | – | வையகம் | மாலை | – | ஆரம் |
| ஊழியம் | – | தொண்டு | நோய் | – | பிணி |
| ஊண் | – | உணவு | தகவல் | – | செய்தி |
| ஊன் | – | இறைச்சி | வயல் | – | கழனி |
| ஊக்கம் | – | ஆர்வம் | விருப்பம் | – | ஆசை/ ஆர்வம் |
| எதிரி | – | பகைவன் | | | |
| எரு | – | உரம்/பசளை | சாலை | – | வீதி |
| எழுச்சி | – | தோற்றம் | கேள்வி | – | வினா |
| இரதம் | – | தேர் | கலம் | – | பாத்திரம் |
| அமருதல் | – | இருத்தல் | சந்திரன் | – | நிலா |
| ஆரணியம் | – | காடு | புனிதம் | – | சுத்தம் |
| ஆத்திரம் | – | கோபம் | எழில் | – | அழகு |
| ஆயுள் | – | வாழ்நாள் | புனிதம் | – | சுத்தம் |
| ஏர் | – | கலப்பை | ஐயம் | – | சந்தேகம் |
| ஏழை | – | வறியவன் | ஒலி | – | ஓசை |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூரியன் | - | ஆதவன் | வருடம் | - | ஆண்டு |
| மிருகம் | - | விலங்கு | புகழ்தல் | - | பாரட்டுதல் |
| இரப்போர் | - | யாசகர் | வேகம் | - | கதி |
| நகைத்தல் | - | சிரித்தல் | அலறுதல் | - | சப்தமிடுதல் |
| பற்றுதல் | - | பிடித்தல் | மேகம் | - | முகில் |
| இரக்கம் | - | அன்பு | அவதானம் | - | கவனம் |
| துவண்டு | - | வாடி | புன்னகை | - | சிரிப்பு |
| ஆதரவு | - | உதவி | கரை | - | ஓரம் |
| தூய்மை | - | சுத்தம் | கறை | - | அழுக்கு |
| மேனி | - | உடல் | விண் | - | வானம் |
| முதியோர் | - | வயோதிபர் | குளம் | - | பொய்கை |
| ஆசிரியர் | - | குரு | வனம் | - | காடு |
| உரைத்தல் | - | கூறுதல் | வழி | - | பாதை |
| தொடக்கம் | - | ஆரம்பம் | செவி | - | காது |
| தபால் | - | அஞ்சல் | கண் | - | விழி |
| முத்திரை | - | அஞ்சல்தலை | கை | - | கரம் |
| முகவரி | - | விலாசம் | தலை | - | சிரசு |
| மட்டில்லாத | - | அளவில்லாத | பழம் | - | கனி |
| பற்று | - | பாசம் | நாடு | - | தேசம் |
| தளர்வு | - | சோர்வு | தூய்மை | - | சுத்தம் |
| உறுதி | - | பலம் | மிடி | - | வறுமை |
| காலன் | - | எமன் | நித்திரை | - | துயில் |
| நித்தம் | - | தினமும் | பூமி | - | பார் |
| பூரணம் | - | நிறைவு | கற்றல் | - | பயில்தல் |
| பதில் | - | விடை | திருடன் | - | கள்வன் |
| தவறு | - | குற்றம் | செல்வம் | - | பொருள் |
| அலுவலகம் | - | பணியகம் | ஒல்லி | - | மெலிந்த |
| வண்ணம் | - | அழகு | ஆலம் | - | நஞ்சு |
| ஆனந்தம் | - | மகிழ்ச்சி | ஆழி | - | கடல் |
| சித்திரம் | - | ஓவியம் | இடர் | - | துன்பம் |
| தந்தை | - | தகப்பன் | இடுக்கன் | - | துன்பம் |
| சண்டை | - | போர் | இணைதல் | - | சேர்தல் |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நாணம் | – | வெட்கம் | புத்தி | – | அறிவு |
| அழகு | – | கோலம் | மகான் | – | பெரியார் |
| நஞ்சு | – | விடம் | நயணம் | – | கண் |
| ஆச்சரியம் | – | வியப்பு | வல்லமை | – | திறமை |
| பெயர் | – | நாமம் | தெளிவு | – | துலக்கம் |
| நுழைதல் | – | புகுதல் | துணிவு | – | தைரியம் |
| மௌனம் | – | நிசப்தம் | சமூகம் | – | இனம் |
| தொலைவு | – | தூரம் | தருணம் | – | சந்தர்ப்பம் |
| நினைவு | – | ஞாபகம் | தொண்டு | – | சேவை |
| உழவன் | – | விவசாயி | நேசம் | – | அன்பு |
| பொதி | – | சுமை | சலவை | – | கழுவுதல |
| வதைத்தல் | – | வருத்துதல் | பரிதாபம் | – | அனுதாபம் |
| அருந்துதல் | – | பருகுதல் | உயர்வான | – | மேலான |
| களிப்பு | – | மகிழ்ச்சி | அமர்தல் | – | இருத்தல் |
| சுத்தம் | – | தூய்மை | கிள்ளை | – | கிளி |
| மலை | – | பருவதம் | உரைத்தல் | – | கூறுதல் |
| நிரை | – | வரிசை | சூழல் | – | சுற்றாடல |
| கவிஞன் | – | புலவன் | கோயில் | – | ஆலயம் |
| நகல் | – | பிரதி | வானம் | – | ஆகாயம் |
| ஏளனம் | – | இகழ்ச்சி | வனப்பு | – | அழகு |
| தெங்கு | – | தென்னை | வாணம் | – | பட்டாசு |
| பொசிதல் | – | கசிதல் | ஆற்றல் | – | திறமை |
| மேதை | – | அறிஞன் | செவிமடுத்தல் | – | கேட்டல் |
| பேதை | – | அறிவிலி | தண்மை | – | குளிர்ச்சி |
| மிடுக்கு | – | வலிமை | பனி | – | குளிர் |
| விசுவாசம் | – | நம்பிக்கை | சலிப்பு | – | வெறுப்பு |
| கழனி | – | வயல் | துளிர் | – | தளிர் |
| தொண்டு | – | சேவை | புள் | – | பறவை |
| கரை | – | ஓரம் | இரசனை | – | சுவை |
| புலவர் | – | பாவலர் | துட்டர் | – | கெட்டவர் |
| ஓய்வு | – | ஆறுதல் | விருட்சம் | – | மரம்/ தரு |
| சம்பளம் | – | வேதனம் | விரோதம் | – | பகை |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விஞ்சை | - | வித்தை | உற்சாகம் | - | சுறுசுறுப்பு |
| பங்கயம் | - | தாமரை | வள்ளல் | - | கொடையாளி |
| சில்லு | - | சக்கரம் | வேழம் | - | யானை |
| மறை | - | வேதம் | சேய்மை | - | தொலைவு |
| தகவல் | - | செய்தி | சீற்றம் | - | கோபம் |
| பரவை | - | கடல் | ஔடதம் | - | மருந்து |
| சாளரம் | - | சன்னல் | மாஞ்சை | - | மயில் |
| மறுமை | - | மறுஉலகு | மதியம் | - | பகல் |
| புகழ் | - | பாராட்டு | பராயம் | - | காலம் |
| பரி | - | குதிரை | பராயம் | - | காலம் |
| உறுமால் | - | தலைப்பாகை | யாத்திரை | - | பிரயாணம் |
| பேதம் | - | பாகுபாடு | திங்கள் | - | சந்திரன் |
| ஆன்மா | - | உயிர் | விளக்கு | - | சுடர்/தீபம் |
| ஈகை | - | கொடை | பனுவல் | - | நூல் |
| வதனம் | - | முகம் | கேசம் | - | கூந்தல் |
| சூடுதல் | - | அணிதல் | கர்வம் | - | செருக்கு |
| வைதல் | - | ஏசுதல் | அரியணை | - | சிந்தனை |
| தரை | - | நிலம் | சுகந்தம் | - | நறுமணம் |
| தன்னலம் | - | சுயநலம் | தினம் | - | நாள் |
| கிளவி | - | சொல் | அவனி | - | பூமி |
| அம்புயம் | - | தாமரை | குடதிசை | - | மேற்கு |
| கிழக்கு | - | குணதிசை | ஆபரணம் | - | அணிகலன் |
| அங்காடி | - | சந்தை | சேய் | - | குழந்தை |
| மழலை | - | குழந்தை | தாரகை | - | நட்சத்திரம் |
| அந்தகாரம் | - | இருள் | கோமாலி | - | விகடன் |
| அந்தரம் | - | வானம் | நிசப்தம் | - | அமைதி |
| இகழ்ச்சி | - | நிந்தை | பட்டம் | - | காற்றாடி |
| இனிப்பு | - | தித்திப்பு | பருவம் | - | காலம |
| உடைமை | - | பொருள் | இரவு | - | நிசி/ இராத்திரி |
| சமயம் | - | மதம்/வேதம் | | | |
| உருசி | - | சுவை | வீடு | - | இல்லம் /மனை |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வித்தை | - | கல்வி | சூழ்ச்சி | - | வஞ்சனை |
| சாந்தம் | - | அமைதி | மாசு | - | குற்றம் |
| கூழ் | - | நீராகாரம் | உலர்தல் | - | காய்தல் |
| உன்னதம் | - | மேன்மை | மையம் | - | நடு |
| மதுரம் | - | இனிமை | இறுதி | - | முடிவு |
| பொல்லாங்கு | - | தீங்கு | ஒப்புதல் | - | உடன்படல் |
| பொன்றுதல் | - | சாதல் | நீர் | - | தண்ணீர் |
| பூதரம் | - | மலை | எளிமை | - | ஏழ்மை |
| தாழ்வான | - | பணிவான | துயர் | - | துன்பம் |
| அநீதி | - | தீங்கு | கொள்கை | - | இலட்சியம் |
| பணி | - | தொண்டு | இலாபம் | - | ஆதாயம் |
| | | /சேவை | அறிவுரை | - | புத்திமதி |
| திடசங்கட்பம் | - | உறுதி | இணையற்ற | - | நிகரற்ற |
| திக்கற்ற | - | வழிதவறிய | பரிதி | - | சூரியன் |
| வலி | - | நோவு | வளி | - | காற்று |
| வழி | - | பாதை | ஒளி | - | வெளிச்சம் |
| விழி | - | கண் | கிலி | - | பயம் |
| திண்ணம் | - | நிச்சயம் | கீதம் | - | பாட்டு |
| ஆவேசம் | - | கோபம் | கானம் | - | பாட்டு |
| மனைவி | - | துணைவி | குன்று | - | மலை |
| பூங்கா | - | சோலை | துளை | - | துவாரம் |
| புனிதம் | - | தூய்மை | தொன்மை | - | புராதனம் |
| குதூகலம் | - | மகிழ்ச்சி | ஆத்மா | - | உயிர் |
| வாதம் | - | தர்க்கம் | இறுதி | - | முடிவு |
| நஷ்டம் | - | ஒறுப்பு | ஆவி | - | உயிர் |
| புனிதம் | - | தூய்மை | நிந்தை | - | இகழ்ச்சி |
| கங்கை | - | ஆறு | அவதானம் | - | கவனம் |
| இடையூறு | - | துன்பம் | வேளை | - | நேரம் |
| கவிதை | - | செய்யுள் | எண்ணம் | - | சிந்தனை |
| பாரம் | - | சுமை | அண்டை | - | அயல் |
| தவறு | - | குற்றம் | இருக்கை | - | ஆசனம் |
| சிந்தை | - | மனம் | தருணம் | - | சந்தர்ப்பம் |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | |
|---|---|---|
| மெருகு | - | அழகு |
| ஆர்வம் | - | விருப்பம் |
| இழுக்கு | - | களங்கம் |
| அனர்த்தம் | - | அழிவு |
| மாந்தர் | - | மனிதர் |
| தமையன் | - | சகோதரன் |
| புலர்தல் | - | விடிதல் |
| கந்தல் | - | கிழிந்த ஆடை |
| திரு | - | இயற்கையழகு |
| உரு | - | செயற்கையழகு |
| சிரமம் | - | கஷ்டம் |
| தூவமரும் | - | தூய்மையான |
| அடைக்கலம் | - | அபயம் |
| எரிச்சல் | - | வெறுப்பு |
| ஈர்த்தல் | - | கவர்தல் |
| உறுப்பினர் | - | அங்கத்தவர் |
| வானரம் | - | குரங்கு |
| வாக்கு | - | சொல் |
| பொலிவு | - | பூ |
| இம்மை | - | இவ்வுலகம் |
| குன்றாத | - | குறையாத |
| பொன்றாத | - | குறையாத |
| மயல் | - | மயக்கம் |
| உன்னதம் | - | உயர்வு |
| தே | - | தெய்வம் |
| பவனம் | - | காற்று |
| நண்பன் | - | தோழன் / சினேகிதன் |
| நண்பி | - | தோழி/ சினேகிதி |
| உண்மை | - | மெய்/ சத்தியம்/ வாய்மை |
| வானம் | - | ஆகாயம்/விசும்பு |
| புலப்படுத்துதல் | - | வெளிப்படுத்தல் |
| அனுதினமும் | - | ஒவ்வொரு நாளும் |
| அலங்கோலம் | - | அவலட்சணம் |



Printed By : ANF TECH - 077 366 46 19

# ஒரு பொருள் பன்மொழி

| | | |
|---|---|---|
| அன்பு | - | பாசம், நேசம், கருணை, காதல், இரக்கம் |
| சந்தோசம் | - | உவகை, களிப்பு, மகிழ்ச்சி, ஆனந்தம், இன்பம், குதூகலம் |
| உடல் | - | உடம்பு, மேனி, மெய், சரீரம், யாக்கை, தேகம் |
| துன்பம் | - | இன்னல், அல்லல், இடர், துயரம், வேதனை, கவலை |
| உலகம் | - | பார், வையகம், தரணி, காசினி, அவனி, பூமி, ஞாலம், புவனம் |
| சூரியன் | - | ஞாயிறு, தினகரன், பகலவன், பரிதி, அருணன் , கதிரவன்,ஆதவன் |
| சந்திரன் | - | திங்கள், நிலவு, மதி, அம்புலி, வான்மதி, நிலா |
| நட்சத்திரம் | - | விண்மீன், தாரகை, வெள்ளி, உடு |
| வானம் | - | ஆகாயம், விசும்பு, விண், விண்ணகம், வான் |
| மன்னன் | - | அரசன், கோ, வேந்தன், கோன், புரவலன், நிருபன்,இராசா |
| காடு | - | கானகம், அடவி, வனம், அரணி, ஆரணியம் |
| நித்திரை | - | துயில், உறக்கம், சயனம், தூக்கம், துஞ்சல் |
| சோறு | - | அன்னம், அடிசில், அமுது, சாதம் |
| வீடு | - | மனை, இல்லம், உறையுள், அகம், கிருகம் |
| குழந்தை | - | குழவி, மழலை, சிசு, சேய், மகவு. |
| விருப்பம் | - | ஆசை, அவா, வேட்கை, பற்று, ஆர்வம்,காதல் |
| புத்தகம் | - | ஏடு, பனுவல், நூல், இழை |
| நெருப்பு | - | தீ, அக்கினி, அழல், தழல், அனல், செந்தணல், சுவாலை |
| கடல் | - | சாகரம், பரவை, சமுத்திரம், மோதிரம், சிந்து |
| மலை | - | வரை, குன்று, பருவதம், பூதரம் |
| ஊழியம் | - | தொண்டு, பணி, சேவை, வேலை |
| ஒலி | - | ஓசை, சத்தம், அரவம், தொனி, இரைச்சல் |
| பாம்பு | - | சர்ப்பம், அரவம், பணி, கட்செவி |
| பூந்தோட்டம் | - | கா, பூங்கா, பூம்பொழில், பூஞ்சோலை, பூங்காவனம் |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | |
|---|---|---|
| வயல் | - | கழனி, மருதநிலம், புலம், கமம், பழனம் |
| உண்மை | - | மெய், சத்தியம், வாய்மை |
| ஒளி | - | வெளிச்சம், சுடர் , தீபம், பிரகாசம், சோதி |
| யானை | - | கரி, ஆனை, குஞ்சரம், வேழம், கயம் |
| குதிரை | - | மா, புரவி, அசுவம், பரி, துரகம் |
| நீர் | - | தண்ணீர், அப்பு, புனல், சலம் |
| தாமரை | - | அம்புயம், முண்டகாரம், பங்கயம், கமலம், முண்டகம் |
| உணவு | - | ஊண், அடிசில், உண்டி, சாப்பாடு, ஆகாரம் |
| தலை | - | சிரம், சென்னி |
| இரத்தம் | - | குருதி, செந்நீர், உதிரம், சோரி |
| பறவை | - | பட்சி, புள் |
| பகைவன் | - | எதிரி, சத்துரு, விரோதி |
| பெண் | - | மங்கை, யுவதி, மகளிர், காரிகை, மாது, நங்கை, பாவை |
| குளம் | - | பொய்கை, வாவி, தடாகம் |
| அழகு | - | வனப்பு, எழில், சுந்தரம், வடிவு, கோலம், கவின் |
| கண் | - | விழி, நயனம், நேத்திரம் |
| சினம் | - | கோபம், சீற்றம், வெகுளி, ஆத்திரம் |

## பல பொருள் ஒரு மொழி

| | | |
|---|---|---|
| அரவம் | - | பாம்பு,ஓசை |
| அகம் | - | மனை,உள்ளம் |
| ஆழி | - | கடல்,மோதிரம்,சக்கரம் |
| பரி | - | அன்பு,குதிரை |
| வளை | - | புற்று,வளையல் |
| ஐயம் | - | சந்தேகம்,பிச்சை |
| வண்ணம் | - | நிறம்,அழகு, |
| மெய் | - | உடல்,உண்மை |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | |
|---|---|---|
| கவி | – | குரங்கு,பாட்டு |
| ஆறு | – | ஓர் எண்,நதி |
| கோ | – | அரசன்,பசு |
| கறை | – | மாசு , குற்றம் |
| கரை | – | ஓரம் , கரைத்தல் |
| ஒளி | – | மறைதல் ,வெளிச்சம் |
| கண்டம் | – | கழுத்து , பெரு நிலப் பிரிவு ,ஆபத்து |
| நகை | – | சிரிப்பு,ஆபரணம் |
| பணி | – | தொண்டு,பாம்பு,கட்டளை |
| கரி | – | யானை,விறகுக்கரி |
| பாவை | – | கண்விழி,பெண்,பொம்மை |
| மதி | – | புத்தி,சந்திரன்,மதித்தல் |
| அரி | – | சிங்கம்,வண்டு,அரிதல் |
| இழை | – | ஆபரணம்,நூல்,பின்னுதல் |
| சக்கரம் | – | சில்லு,வட்டம் |
| வளை | – | புற்று , வளையல் , சங்கு |
| வடு | – | பிஞ்சு,தழும்பு,காயம் |
| கலை | – | வித்தை,ஆண் மான் |
| கலம் | – | கப்பல்,பாத்திரம்,ஆபரணம் |
| அரை | – | பாதி,இடுப்பு,அரைத்தல் |
| அடி | – | அடித்தல்,நீட்டலளவை,பாதம் |
| முடி | – | மகுடம்,முடித்தல்,குடுமி |
| திங்கள் | – | மாதம்,வாரநாள்,சந்திரன் |
| கலை | – | வித்தை,ஆண்மான்,கலைதத்ல் |
| திங்கள் | – | வாரத்தில் ஒரு நாள்,சந்திரன் |



Printed By : ANF TECH - 077 366 46 19

# வாடிக்கையாளர்களே!

## எங்களிடம்,



**போட்டோ பிரதிகள்**

**வர்ணப் பிரதிகள்**




**மின்சாரக் கட்டணங்கள்**

**நீர்க்கட்டணங்கள்**

National Water Supply & Drainage Board



**லெமினேட்டிங்**

**போன்ற சேவைகளை பெற்றுக் கொள்ளலாம்.**

ANF TECH

01ம் குறிச்சி மார்கட் முன்பாக,
இலக்கம் 222/5, ஊர் வீதி - காத்தான்குடி 01.
தொலைபேசி இலக்கம் : 077 366 4619
EMAIL: anftechkky@gmail.com

# ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

## "லகர", "ளகர" ,"ழகர" வேறுபாட்டுச் சொற்கள்

அலை – கடலலை
அளை – புற்று, தயிர், குகை
அழை – அழைத்தல், கூப்பிடுதல்
ஒளி – வெளிச்சம், ஒளிதல்(மறைதல்)
ஒலி – சத்தம், ஓசை
ஒழி – ஒழித்தல் ( இல்லாமல் செய்தல்)
வலி – நோவு
வளி – காற்று
வழி – பாதை
உலவு – உலாவுதல், பவனி வருதல்
உளவு – வேவு பார்த்தல்
உழவு – வயல் உழுதல்,

## "னகர", "ணகர" ,"நகர" வேறுபாட்டுச் சொற்கள்

மனம் – உள்ளம்
மணம் – வாசம், திருமணம்
வானம் – ஆகாயம்
வாணம் – பட்டாசு, அம்பு
பானம் – குடிபானம்
பனி – குளிர், அச்சம்
பாணம் – அம்பு
பணி – தொண்டு, வேலை,ஏவல்,கட்டளை

## "ரகர", "றகர" வேறுபாட்டுச் சொற்கள்

அரம் – ஒரு கருவி
அறம் – தருமம், கொடை
அரி – வெட்டு
அறி – தெரிந்து கொள்
மரம் – தாவர வகை
மறம் – வீரம்
அரை – பாதி
அறை – வீட்டின் பகுதி
கரை – ஓரம்
கறை – அழுக்கு
பறவை – பறப்பது
பரவை – கடல்


Printed By : ANF TECH - 077 366 46 19

# ஒலி வேறுபாட்டு வாக்கியங்கள்

வலை - **வலை** கொண்டு மீனவன் மீன் பிடித்தான்.
வளை - எலி வளையானாலும் தனி **வளை** வேண்டும்.
வலி - எனது உடலில் **வலி** உண்டானது.
வளி - **வளி** மாசடையாது பாதுகாப்போம்.
வழி - **வழியில்** குப்பைகளைக் கொட்டக் கூடாது.
ஒலி - கோயில் மணியின் **ஒலி** கேட்டது.
ஒளி - சூரிய **ஒளி** மறைந்தது.
ஒழி - சூழலை சுத்தமாக வைத்தால் நுளம்புகளை **ஒழிக்கலாம்.**
கூரை - வீட்டுக் **கூரையில்** காகம் இருந்தது.
கூறை - அம்மா **கூறைச்** சேலை வாங்கினார்.
இரங்கு - ஏழைகளுக்கு **இரங்குதல்** வேண்டும்.
இறங்கு - கண்ணன் ஏணியிலிருந்து **இறங்கினான்.**
கரை - கடற்**கரையில்** சிறுவர்கள் ஓடி விளையாடினர்.
கறை - ஆடையில் **கறை** படியாது பாதுகாப்போம்.
மனம் - மாலதியின் **மனதில்** மகிழ்ச்சி ஏற்பட்டது.
மணம் - மலரில் நறு**மணம்** உண்டு.
பானம் - தாகந்தீர குளிர்**பானம்** அருந்தினான்.
பாணம் - வேடன் வில்லை வளைத்து **பாணம்** தொடுத்தான்.
ஊன் - **ஊன்** உணவு உடல் வளர்ச்சிக்கு உதவும்.
ஊண் - **ஊணும்** உறக்கமும் உடலுக்கு அவசியம்.

## நூல்களும் இயற்றிவர்களும்

- திருக்குறள் என்ற நூலை இயற்றியவர் - திருவள்ளுவர்
- அத்தி சூடி என்ற நூலை இயற்றியவர் - ஔவையார்
- சீறாப்புராணத்தை இயற்றியவர் - உமறுப்புலவர்
- சத்திய சோதனை என்ற நூலை இயற்றியவர் - மகாத்மா காந்தி
- மகாபாரதம் என்ற நூலை இயற்றியவர் - வேதவியாசர்
- மஹாவம்சம் என்ற நூலை இயற்றியவர் - மகாநாம தேரர்
- பெரிய புராணம் என்ற நூலை இயற்றியவர்- சேக்கிழார்
- கீதாஞ்சலி என்ற நூலை இயற்றியவர் - ரவிந்திரநாத் தாகூர்
- கம்பராமாயணம் என்ற நூலை இயற்றியவர்- கம்பர்
- சூலவம்சம் என்ற நூலை இயற்றியவர் - தர்ம கீர்த்தி தேரர்
- குடியரசு என்ற நூலை இயற்றியவர் - பிளாட்டோ
- தேசங்களின் செல்வம் என்ற நூலை இயற்றியவர்-அடம் ஸ்மித்



Printed By : ANF TECH - 077 366 46 19

# எதிர்க் கருத்துச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| இக்கரை | அக்கரை | புகழ் | இகழ் |
| ஒற்றுமை | வேற்றுமை | கோபம் | சாந்தம் |
| உள்ளே | வெளியே | உண்டு | இல்லை |
| தண்ணீர் | வெந்நீர் | மகிழ்ச்சி | கவலை |
| குறைவு | அதிகம் | நினைவு | மறதி |
| தோற்றம் | மறைவு | சூடு | குளிர் |
| இன்சொல் | வன்சொல் | மழை | வெயில் |
| சுத்தம் | அசுத்தம் | விழித்தல் | உறங்குதல் |
| மேடு | பள்ளம் | மயக்கம் | தெளிவு |
| வீரன் | கோழை | கலக்கம் | தெளிவு |
| நன்மை | தீமை | பழைமை | புதுமை |
| முன்பு | பின்பு | சிரிப்பு | அழுகை |
| மாரி | கோடை | ஒன்று | பல |
| வலம் | இடம் | வளைவு | நேர் |
| காடு | நாடு | வேகம் | மந்தம் |
| வரவு | செலவு | இருள் | ஒளி |
| இளமை | முதுமை | காலை | மாலை |
| பிறப்பு | இறப்பு | பெரிது | சிறிது |
| உதயம் | மறைவு | வினா | விடை |
| இலாபம் | நஸ்டம் | ஐது | அடர்த்தி |
| நாகரிகம் | அநாகரிகம் | பாவம் | புண்ணியம் |
| ஊக்கம் | சோம்பல் | இரத்தல் | ஈதல் |
| உதவி | உபத்திரவம் | ஆதி | அந்தம் |
| அழிவு | ஆக்கம் | பலர் | சிலர் |
| வண்மை | மென்மை | மலர்தல் | கூம்புதல் |
| நண்பன் | பகைவன் | அகம் | புறம் |
| அமைதி | ஆரவாரம் | அண்மை | சேய்மை |
| அன்பு | வன்பு | மென்மை | வன்மை |
| நிறைவு | குறைவு | சுருக்கம் | விரிவு |
| நல்ல | கெட்ட/தீய | நன்று | தீது |
| பழம் | காய் | நில் | செல் |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆத்திகன் | - | நாத்திகன் | கங்குல் | - | பகல் |
| அவசியம் | - | அநாவசியம் | வானம் | - | பூமி |
| துணிவு | - | தயக்கம் | தூரம் | - | சமீபம் |
| உண்டு | - | இல்லை | நட்பு | - | பகை |
| வாழ்க | - | ஒழிக | பாரபட்சம் | - | நேர்மை |
| நீர் | - | நெருப்பு | விருப்பு | - | வெறுப்பு |
| கூடல் | - | பிரிதல் | அசல் | - | போலி |
| ஆண்டான் | - | அடிமை | ஆண்டி | - | அரசன் |
| சண்டை | - | சமாதானம் | ஏற்றம் | - | இறக்கம் |
| அடி | - | நுனி | மண் | - | விண் |
| இணைதல் | - | பிரிதல் | குன்று | - | குழி |
| குடிவரவு | - | குடியகழ்வு | கசப்பு | - | இனிப்பு |
| முரடு | - | சாது | மறதி | - | ஞாபகம் |
| கூட்டல் | - | கழித்தல் | | | |

| | | |
|---|---|---|
| வெயில் | - | மழை |
| மதிப்போம் | - | அவமதிப்போம் |
| அழகு | - | அலங்கோலம் |
| ஏழை | - | செல்வந்தன் |
| செங்கோல் | - | கொடுங்கோல் |
| போற்றுதல் | - | தூற்றுதல் |
| கோலம் | - | அலங்கோலம் |
| பொறுத்தார் | - | பொங்கினார் |
| பாலைவனம் | - | சோலைவனம் |
| ஞானம் | - | அஞ்ஞானம் |
| ஆரோகணம் | - | அவரோகணம் |
| குறுக்காக | - | நெடுக்காக |
| ஆக்கம் | - | கேடு/ அழிவு |



Printed By : ANF TECH - 077 366 46 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கீழே | - | மேலே | உறவு | - | பகை |
| சாதாரணம் | - | அசாதாரணம் | ஏழை | - | பணக்காரன் |
| அமிர்தம் | - | நஞ்சு | உற்சாகம் | - | சோம்பல் |
| இழிவான | - | உயர்வான | ஒருமை | - | பன்மை |
| சுயநலம் | - | பொதுநலம் | உபகாரம் | - | அபகாரம் |
| இணக்கம் | - | பிணக்கம் | பலம் | - | பலவீனம் |
| அகம் | - | புறம் | தூய்மை | - | களங்கம் |
| நீளம் | - | அகலம் | அச்சம் | - | தைரியம் |
| மலிவு | - | ஒறுப்பு | புராதனம் | - | நவீனம் |
| கடினம் | - | இலகு | குற்றம் | - | குணம் |
| உதயம் | - | அஸ்தமனம் | ஆதரவு | - | அனாதரவு |
| மேதை | - | பேதை | சுகம் | - | துக்கம் |
| உலோபி | - | வள்ளல் | உயர்வு | - | தாழ்வு |
| தொன்மை | - | நவீனம் | ஐயம் | - | தெளிவு |
| எளிது | - | அரிது | கனவு | - | நனவு |
| வெற்றி | - | தோல்வி | நெட்டை | - | குட்டை |
| நெகிழ்ச்சி | - | இறுக்கம் | காலம் | - | அகாலம் |
| கோபம் | - | சாந்தம் | மண் | - | விண் |
| பிளவு | - | ஐக்கியம் | சாதகம் | - | பாதகம் |
| விவேகி | - | மூடன் | அவசரம் | - | நிதானம் |
| பாலர் | - | விருத்தர் | கண்டனம் | - | பாராட்டு |
| ஏற்றுமதி | - | இறக்குமதி | இசை | - | வசை |
| தட்பம் | - | வெப்பம் | துரிதம் | - | தாமதம் |
| கீழே | - | மேலே | ஆண்டான் | - | அடிமை |
| நீண்ட | - | குறுகிய | உருவம் | - | அருவம் |
| மலர்ச்சி | - | வாட்டம் | பிற்பகல் | - | முற்பகல் |
| விரும்பு | - | வெறு | தீவினை | - | நல்வினை |
| நோயாளி | - | சுகதேகி | ஈரம் | - | வறட்சி |
| பேதை | - | மேதை | தண்டனை | - | மன்னிப்பு |
| எரிதல் | - | அணைதல் | கேள்வி | - | பதில் |
| மூடு | - | திற | செல்வம் | - | வறுமை |
| கருமை | - | வெண்மை | ஊடல் | - | கூடல் |

## நிறுத்தக் குறிகள் (PUNCTUATION)

| | | |
|---|---|---|
| முற்றுப்புள்ளி | ( . ) | (Full stop) |
| காற்புள்ளி | ( , ) | (Comma) |
| வினாக்குறி | ( ? ) | (Q uestion mark) |
| வியப்புக்குறி | ( ! ) | (Exclamation mark) |
| மேற்கோட்குறி | ("...") | (Quotation mark/ Inverted commas) |
| அடைப்புக்குறி | ( ) | (Brackets) |
| இடையீட்டுக்கோடு | ( - ) | (Dash) |

| உயிர்க் குறிகள் | பெயர் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| ா | அரவு | வாத்து,காம்பு |
| ி | விசிறி | சிறப்பு,விந்தை,கிளி |
| ீ | விசிறியும் சுழியும் | மீன்கள,நீலம்,கீதம் |
| ெ | ஒற்றைக்கொம்பு | செழிப்பு,வெற்றி |
| ே | இரட்டைக் கொம்பு | மேதை,நேரம்,கேள்வி |
| ை | சங்கிலிக் கொம்பு | வைகாசி, வைத்தியர் |
| ெ...ா | ஒற்றைக்கொம்பும் அரவும் | தொட்டில்,தொழுகை |
| ே...ா | இரட்டைக்கொம்பும் அரவும் | தோட்டம்,சோதனை |
| / | கீழ்க்கால் | சுவாசம்,புனல்,யுத்தம் |
| ு | கீழ்க்காலும் சுழியும் | சூரியன்,பூமி |
| ு | மடக்கேறு | நுங்கு,,துயில்,கறுப்பு |
| ூ | மடக்கேறும் அரவும் | நூதனசாலை,தூக்கம் |

**விடுகதைகளுக்கான விடைகள்**

| | | |
|---|---|---|
| 1.நாய் | 2.ஆறு | 3. பற்கள், உதடுகள் |
| 4. பால் | 5. கற்பூரம் | 6. நாணயம் |
| 7.உண்டியல் | 8.கண்ணாடி | 9. நாணல் |
| 10. தலை முடி | 11. சூரியன் | 12. ஏணி |
| 13.கடல் | 14. வாழைமரம் | 15.இளநீர் |
| 16. தண்ணீர் 17. சங்கு | 18. சேவல் | 19. மெழுகுவர்த்தி |
| 20. நிழல் | | |



Printed By : ANF TECH - 077 366 46 19

## விடுகதைகள்

1. சீருடை இல்லாத காவலாளி. சம்பளம் கேட்காத காவலாளி. அவன் யார்?
2. நிற்காமல் ஓடுபவனைத் துரத்திப்பிடிக்க ஆளில்லை. அவன் யார்?
3. திறந்தால் முத்துக்கள். மூடினால் பவளங்கள். அவை யாவை?
4. தன்னிடம் சேருபவனை தன்னைப்போலவே மாற்றுவான். அவன் யார்?
5. தீக்குளித்துச் சாகிறவன் காற்று குளித்தும் சாவான். அவன் யார்?
6. சுண்டி விட்டால் இரத்தம் வராது. ஆனால், வெற்றி தோல்வி வரும். அது எது?
7. சின்ன வாயில் ஊட்டி விடும் உணவை ஜீரணம் செய்யாமல் வைத்திருப்பான். அவன் யார்?
8. முதுகிலே அரிதாரம் பூசுபவன் முகத்தைப் பளிச்சென்று காட்டுவான். அவன் யார்?
9. வில்லாய் வளைபவன் ஒருபோதும் ஒடிந்து போகமாட்டான். அவன் யார்?
10. அமாவாசைக்கு வயதானால் பௌர்ணமியாகும். அது என்ன?
11. மின்சாரம் இல்லாத வேளையிலும் எரிவான். அவன் யார்?
12. இரண்டு கால்கள் இருப்பவனை விழாமல் பிடித்துக்கொள்ள வேண்டும். அவன் யார்?
13. கண்ணுக்கு எட்டியவரை சொட்டு நீலமாய்த் தெரிவான். கையிலெடுத்தால் நிறமில்லாது போவான். அவன் யார்?
14. வளமாய் வளர்ந்த மரம். வாசற்காலுக்கு உதவாத மரம். அது என்ன?
15. குண்டுச்சொம்பில் தண்ணீர் இருந்தும் குருவி குடிக்க வழியில்லை. அது என்ன?
16. கடித்தால் கடிபடமாட்டான். பிடித்தால் பிடிபடமாட்டான். அவன் யார்?
17. வெள்ளைக்கத்தரிக்காய் கள்ளக் கூச்சல் போடுது. அது என்ன ?
18. கொண்டை அணிந்த ஆண் பிள்ளை கூவி அழைத்தால் ஊரே எழும். அது என்ன?
19. உடலை உருக்கி வேலை செய்வாள். வெளிச்சத்தைக் கொடுப்பாள். அவள் யார்?
20. உருவத்தைக் காட்டும். கண்ணாடி அல்ல: செய்வதைச் செய்யும். குரங்கு அல்ல. அது என்ன?



Printed By : ANF TECH - 077 366 46 19

1. நித்திரையின் தூதுவன். நினையாமல் எட்டிப் பார்ப்பவன்.
அவன் யார்?

2. துளித் துளியாய் கண்ணீர் விட்டு இருளைத் தூர விரட்டும்.
அது என்ன?

3. கண்ணில் கண்டதைச் சுருட்டிக் கொள்வான். வண்ண வண்ண நிறங்களில் வெளியேறுவான். அவன் யார்?

4. கண்ணுக்குத் தெரியாதவன். உயிருக்கு உகந்தவன். அவன் யார்?

5. தலையைச் சீவினால் தாளிலே மேய்வான். அவன் யார்?

6. சுற்றுவது தெரியாது. ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான். அவன் யார்?

7. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல். அது என்ன?

8. கழற்றிய சட்டையை திருப்பிப் போட மாட்டான். அவன் யார்?

9. நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட நாள் ஆயுள். அவன் யார்?

10. தாவுவதும் அவனே. தாக்குவதும் அவனே. அவன் யார்?

11. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான். அவன் யார்?

12. வாய் இல்லை, வார்த்தைகள் சொல்வான். உயிர் இல்லை, ஊருக்குப் பறப்பான். கால் இல்லை, வீட்டுக்கு வருவான். அவன் யார்?

13. மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையும், வாசனை தந்து நெஞ்சிலே நிறையும். அது என்ன?

14. உரசினாலே உயிரை விடுவான். அவன் யார்?

15. அடர்ந்த காட்டிற்குள் நுழைவான். அலைந்து திரிந்து அழகு படுத்துவான். அவன் யார்?

16. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல். அது என்ன?

17. அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன?

18. பழகினால் மறக்காதவன். பயந்தோரை விடாதவன். அவன் யார்?

19. ஆடி ஆடி நடப்பான். அரங்கத்தில் நடப்பான். அவன் யார்?

20. ஆனை விரும்பும், சேனை விரும்பும், அடித்தால் வலிக்கும், கடித்தால் இனிக்கும். அது என்ன?

21. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் தூசி கிளம்பாது. அது என்ன?

22. இவன் அழுதால் உலகம் சிரிக்கும். அவன் யார்?

23. ஊசி போல் இருப்பான்.. ஊரையே எரிப்பான். அவன் யார்?



Printed By : ANF TECH - 077 366 46 19

24. வெளியில் போகும் போது நண்பன். வீட்டிற்குள் வந்தால் விரோதி. அவன் யார்?

25. நீந்தத் தெரியும், மீனல்ல. நடக்கத் தெரியும், மனிதனல்ல. இறக்கை உண்டு, தேனீயல்ல. இறகு உண்டு, பறக்காது. அது என்ன?

26. வானம் விடும் கண்ணீர் எது?

27. மேலே பறப்பவனுக்கு கீழே கடிவாளம். அது என்ன?

28. மீன் பிடிக்கத் தெரியாது. ஆனால் வலை பின்னுவான். அவன் யார்?

29. அள்ள அள்ளக் குறையாது. ஆனால் குடிக்க உதவுவது. அது என்ன?

30. தண்ணீரில் குதித்தவன். வீட்டுக் குழம்பில் கொதித்தான். அவன் யார்?

31. தலை தெரியும். உடல் தெரியாது. கைபட்டால் உருத்தெரியாது அது என்ன?

32. முள்ளுக்குள்ளே முத்துக்குவியல் அது என்ன?

33. தன்னை நம்பாதவன் கூடவே வருவான் அவன் யார்?

34. அரிசி போலப்பூப் பூக்கும். அம்மாடி என்று காய் காய்க்கும். அது என்ன?

35. அள்ள அள்ளப் பெரிதாகும். அது என்ன ?

36. அச்சு இல்லாத சக்கரம். அழகு காட்டும் சக்கரம். அது என்ன?

| | | |
|---|---|---|
| 1. கொட்டாவி | 12. கடிதம் | 23. தீக்குச்சி |
| 2. மெழு திரி | 13. சாம்பிராணி | 24. செருப்பு |
| 3. கமரா | 14. தீக்குச்சி | 25. வாத்து |
| 4. காற்று | 15. சீப்பு | 26. மழை |
| 5. பென்சில் | 16. கிளி | 27. பட்டம் |
| 6. பூமி | 17. நர் | 28. சிலந்தி |
| 7. முட்டை | 18. நாய் | 29. கடல் நீர் |
| 8. பாம்பு | 19. யானை | 30. மீன் |
| 9. இரும்பு | 20. கரும்பு | 31. நீர்க்குமிழி |
| 10. காற்று | 21. எறும்பு | 32. மீன் |
| 11. இளநீர் | 22. வானம் | 33. நிழல் |
| 34. முருங்கைப் பூ | 35. பள்ளம் | 36. வளையல் |



Printed By : ANF TECH - 077 366 46 19

| தன்மை ஒருமைச் சொற்கள் | தன்மைப் பன்மைச் சொற்கள் |
|---|---|
| நான் | நாங்கள் |
| வந்தேன் | வந்தோம் |
| என் | எங்கள் |
| எனது | எங்களது |
| எனக்கு | எங்களுக்கு |
| யான் | யாம்,நாம் |
| **முன்னிலை ஒருமைச் சொற்கள்** | **முன்னிலைப் பன்மைச் சொற்கள்** |
| நீ, நீர் | நீங்கள், நீவிர் , |
| உனது | உங்களது |
| உன் | உங்கள் |
| வந்தாய் | வந்தீர்கள் |
| உனக்கு | உங்களுக்கு |
| உன்னுடைய | உங்களுடைய |
| **படர்க்கை ஒருமைச் சொற்கள்** | **படர்க்கை பன்மைச் சொற்கள்** |
| அவன் | அவர்கள் |
| அது | அவை |
| சிறுவன் | சிறுவர்கள் |
| அவர் ,அவள் | அவர்கள் |

## விகடத் துணுக்குகள்

### நமது மந்திரிகள்

| | | |
|---|---|---|
| மூளை | - | பிரதம மந்திரி |
| தண்டு வடம் | - | இணை அமைச்சர் |
| நரம்பு மண்டலம் | - | ஊடகத்துறை அமைச்சர் |
| தலை | - | கல்வி அமைச்சர் |
| தோல் | - | மனிதவள மேம்பாட்டு அமைச்சர் |
| எலும்பு | - | பாதுகாப்பு அமைச்சர் |
| கண் | - | வெளியுறவுத்துறை அமைச்சர் |
| காது | - | தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் |
| மூக்கு | - | சுகாதாரத்துறை அமைச்சர் |
| பல் | - | கிராமியத்துறை அமைச்சர் |
| இதயம் | - | உள்நாட்டு விவகாரத்துறை அமைச்சர் |
| கை | - | தொழில்துறை அமைச்சர் |
| வயிறு | - | உணவுத்துறை அமைச்சர் |
| கால் | - | போக்குவரத்து அமைச்சர் |



Printed By : ANF TECH - 077 366 46 19

# வாடிக்கையாளர்களே!

## எங்களிடம்,






**போட்டோ பிரதிகள்**

**வர்ணப் பிரதிகள்**

**மின்சாரக் கட்டணங்கள்**

**நீர்க்கட்டணங்கள்**



**லெமினேட்டிங்**

**போன்ற சேவைகளை**
**பெற்றுக் கொள்ளலாம்.**

01ம் குறிச்சி மார்கட் முன்பாக,
இலக்கம் 222/5, ஊர் வீதி - காத்தான்குடி 01.
தொலைபேசி இலக்கம் : 077 366 4619
EMAIL: anftechkky@gmail.com